# வீரகத்தி விநாயகரும் கொல்லங்கலட்டிக் கிராமமும்




மலராசிரியர்

திருமதி. அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்

முன்னாள் ஆசிரிய ஆலோசகர்

வலிகாமம் கல்வி வலயம்

# வீரகத்தி விநாயகரும் கொல்லங்கலட்டிக் கிராமமும்

மலராசிரியர்

**திருமதி.அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்**

B.A.Dip.in Ed

**முன்னாள் ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் கல்வி வலயம்**

**(செயலாளர் வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரண சபை)**

**வெளியீடு : விநாயகர் ஆலய தொண்டர்கள்**

# உள்ளடக்கம்


1) ஆசியுரை. 3

2) வாழத்துரை. 4-7

3) நூல் ஆசிரியரின் செய்தி. 8-10

4) விநாயகர் வரலாறு. 11-14

5) மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் வரலாறு. 15-17

6) கொல்லங்கலட்டி வீரகத்திவிநாயகர் ஆலயவளர்ச்சியில் சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்களின் பங்கு. 11-22

7) விநாயகப் பெருமான் அடிதொழுவோம். 23-26

8) வீரகத்தி விநாயகருக்கு தேர்த்திருவிழா. 27-28

9) எங்கள் பிள்ளையார். 29-30

10) எழிச்சிமிகு எமது கிராமத்தின் ஒரு மீள் நோக்கு. 31-37

11) எழில்மிகு திருவூர் எம்மூர் ஆகும். 38-40

12) மறைந்தும் மனதில் மறக்க முடியாதவர்கள். 41-44

13) மாவை முதலியார். 45-47

14) கொல்லங்கலட்டி. 48-49

15) விநாயகர் திருவுருவின் தத்துவம். 50-52

16) பிள்ளையாரும் கூட்டுப் பிரார்த்தனையும். 53

17) மாவை கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் பேரில் பாடியவை. 54-56

18) வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல். 57-61

19) வீரகத்தி விநாயகனைப் பாடி மகிழ்வீர். 62-63

20) வீரகத்தி விநாயகர் திருத்தல வெண்பா. 64-67


21) மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் துதி. 68-69

22) ஔவையார் அருளிச்செய்த விநாயகர் அகவல் 70-72

23) ஸ்ரீ விநாயகர் நூற்றெட்டு நாமாவளி வழிபாடு 73-78

24) விநாயகர் கவசம் 79-81

# பிள்ளையார்



கி.பி ௮ம் நூற்றாண்டில் சோழநாட்டு இளவரசி
மாருதப்புரவீக வல்லியால் பிரதிஷ்டை
செய்யப்பட்ட வீரகத்தி விநாயகர்

# ஆசியுரை

சு.கணேசலிங்கம் ஐயா
ஆலய சிவாச்சாரியார்
கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர தேவஸ்தானம்

## கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய தேவஸ்தானம் ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர ஆலய தேவஸ்தானம்

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம் மாருதப்புரவீக வல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயக விக்கிரகத்தைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புப் பெற்ற முதலாவது தலமாகும். பெருமை மிக்க இக் கோவிலின் இன்றைய வளர்ச்சி கண்டு வாழ்த்தாதவர்கள் இல்லை என்றே கூற வேண்டும்.

மனித வாழ்வில் உயர் நிலையை தரக் கூடியது இறை வழிபாடாகும். அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்களாகும். அந்த வகையில் வீரகத்தி விநாயகரும் அடியார்களது அகக் கண்ணைத் திறந்து அருள்பாலிப்பவர். அற்புதம் நிறைந்த விநாயகர் உறைந்த இப்புனிதத் திருக்கோவிலோடு மிக நீண்ட தொடர்பு கொண்ட நூலாசிரியர் இக் கோவிலின் சிறப்புக்களை "வீரகத்தி விநாயகரும் கொல்லங்கலட்டிக் கிராமமும்" என்ற மலரில் பதிவு செய்தமை விநாயகரின் அருட்செயலே. மேலும் இத்தகைய பணிகள் தொடர வீரகத்தி விநாயகரும் தேவஸ்தானமும் ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரரும் தேவஸ்தானமும் அருள்புரிய எம் நல்லாசிகள் உரித்தாகுக.

# வாழ்த்துப்பா

1) திருவோங்கு யாழ்ப்பாணத் திலக மாக
திகழ்மாலை கொல்லங்க லட்டி தன்னில்
மருகோங்கு மாமுகத்தை நீக்கு வென்று
மாருதப் புரவீக வல்லி செய்த
தருகோங்கு தண்டமிழும் சைவம் வாழும்
தகையுறையூர் வீரகத்தி நாயகர் தம்
மெருகோங்கு மேன்மைவர லாறு சொல்லும்
மேதகுகைங் கரியங்கள் மக்கள் வாழி!

2) மன்னுபுகழ் மாவைகொல் லங்க லட்டி
மதிதவழும் மாதேவன் சிதம்ப ரேசர்
மின்னுமருப் புடையவன்தன் மாண்பு மற்றும்
மிளிர்கல்வி கலாசாரம் மிக்கோர் கொற்றம்
அன்னபரி பூரணம்தன் ஆக்கம் கூறும்
ஆனபொருள் பெரியோர்கள் பாக்கள் ஆய்ந்து
சொன்னபுகழ் வரலாறு புதுமை மேன்மை
சொல்லழகின்சேமமுறு சேவை வாழி

3) வித்தகனாம் வீரகத்தி நாய கன்தன்
விந்தையொகு வியத்தகு நற் கிராமகாதை
அத்தனையும் ஆய்ந்து அழ காகக்கோர்த்து
அற்புதமாய் ஆக்கி எமக் களித்தீர்வாழி!
எத்திசையும் எழில்பொழில் சூழ எம்மூர்ஏற்றம்
எல்லவரும் என்றென்றும் அறியச் செய்தீர்!
அத்திமுகத் தையனவன் ஆசி கூடி
ஆனந்த வரங்களொடு வாழி! வாழி!

அன்புடன் இனிதே வாழ்த்தும்
குமரேசன் புரந்தரன்
(சட்டத்தரணி)

# வாழ்த்துரை

திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம்
முன்னாள் அதிபர் இராமநாதன் கல்லூரி

இரு தசாப்தங்களாக மனித நடமாட்டமின்றி அழிந்து போன வீடுகளையும் இடிந்த ஆலயங்களையும் அடர்ந்த காட்டினையும் போரின் வடுக்களாய் சுமந்த கொல்லங்கலட்டிக் கிராமம் மீண்டும் தன்னை கட்டியெழுப்பி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்து "கொல்லங்கலட்டிக் கிராமமும் வீரகத்தி விநாயகரும்" என்ற மலரினை வெளியிடும் நிலைக்கு வந்துள்ளமை பிரமிக்க வைப்பதுடன் பெருமையும் தருகிறது.

இத்தகைய பணிகளை மேற்கொண்ட பரோபகாரிகளும் புலம் பெயர் நாடுகளில் வாழும் மண்ணின் மைந்தர்களும் பாராட்டுதற்கு உரியவர்கள். கிராமம் மீண்டும் மிடுக்குடன் எழுச்சி பெற்று, நித்திய பூஜைகள் நடைபெற்று அருள்பாலிக்கும் ஆலயமாக வீரகத்தி விநாயகர் ஆலயம் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை கிராமத்தின் மீது மக்கள் கொண்டிருந்த பற்றைக் காட்டுவதாக அமைந்துள்ளது. குடாநாட்டு மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து தமது காணிகள் விடுவிக்கப்பட்டதுடன் தங்கள் குலதெய்வங்களின் ஆலயங்களை புனருத்தாரணம் செய்வதையே தமது முதற் கடமையாக கொள்கின்றனர். இந்த உணர்விற்கு கொல்லங்கலட்டி கிராம மக்கள் முன்னுதாரணமாக திகழ்கின்றனர்.

துர்அதிஷ்டவசமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் எமது வரலாறுகள் அழிந்துவிட்டன. ஒரு வரலாறு மக்களால் அறியப்படாத வரையில் உண்மையான வரலாறு அழிந்து புதிய வரலாறுகள் உருவாகுவது தற்போதைய நிலையாகும். இதனால் எமது கிராம மக்கள், ஆலயங்கள், கிராமத்தின் வளர்ச்சிக்கு தங்கள் சொத்துக்களையும், அறிவினையும் வழங்கிய பெரியார்கள் என்பவற்றின்

வரலாற்றை ஆவணப்படுத்துவது காலத்தின் தேவையாகும். கொல்லங் கலட்டிக் கிராமமும் ஆலயமும் எழுச்சியடைந்த போது கிராமத்தின் வரலாற்றை ஆவணப்படுத்துவதற்காக அயராது உழைத்து இம் மலரினை வெளியிட்ட ஆலய புனருத்தாரண சபையின் செயலாளர் திருமதி. அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் அவர்களின் பணி பாராட்டிற்கு உரியதாகும். இம்மலர் கிராமத்தின் உன்னதத்தையும், வரலாற்று ஆவணங்களையும் புதிய தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் என்பதில் சந்தேகமில்லை. இம்மலர் வீரகத்தி விநாயகரின் வரலாற்று பெருமைகள் கிராமத்தின் பண்பாடுகள், கிராமத்தின் பெரியார்களின் சேவைகள் அனைத்தையும் சிறப்பாக வெளிக் கொணர்ந்துள்ளது.

கொல்லங்கலட்டிக் கிராமம் சகல வளங்களுடன் உயர்ந்து நிற்க வீரகத்தி விநாயகர் அருள்பாலிக்க வேண்டி வணங்கி விநாயகர் அருளோடு மென்மேலும் வரலாற்று பெருமைகளை தாங்கி இம்மலர் தொடர்ந்து வெளிவர வாழ்த்தி நிற்கின்றேன்.



# வாழ்த்துரை

திருமதி.சசிகலா ஜெயவிந்தன்
கிராம உத்தியோகத்தர் J/232

**"ஆலயந்தானும் அரன் எனத் தொழுவோம்"**

என்பது சிவஞானபோதம் இந்த உண்மை சைவமக்களுடைய வாழ்விலே நன்கு பிரபலித்துள்ளது. வலி வடக்கில் சிறியளவும் பெரியளவுமாகக் காட்சி தருகின்ற எத்தனையோ ஆலயங்கள் இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாவிட்டபுரம் தெற்கிலே அமைந்த கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய மகிமையை நாம் பாராட்ட வேண்டியிருக்கின்றது.

கல்விமான்களும் உழைப்பாளிகளும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களும் வாழ்ந்து வருகின்ற இக் கிராமத்தில் கோயில் கொண்டு நல்லருள் பாலிக்கும் விநாயகப் பெருமானின் திருவருட் கடாட்சத்தின் பேறாய் நடைபெறும் அருட்செயல்களையும் கொல்லங்கட்டிக் கிராமத்தின் பழம்பெருமைகளையும் வெளிக் கொணரும் "வீரகத்தி விநாயகரும் கொல்லங்கலட்டியும்" எனும் இம் மலரின் சிறப்பு நூற் பொலிவு கண்டு மகிழ்வுறும் பிரசைகளில் நானும் ஒருவர்.

காலத்தின் தேவையென கருத்தினில் இருத்தி இந்த நற்பணியை மேற்கொள்ளும் நூலாசிரியரது முயற்சி பாராட்டுக்குரியது. அத்துடன் இந்நூல் எமது வருங்கால சந்ததியினருக்குப் பயன்பெறக் கூடிய நூலாக மலரும் என்பதில் ஐயமில்லை. இவ் வெளியீடு ஆன்மீக நெறியும் பக்தி மணமும் வீசி சிறப்புற விநாயர் திருவருள் கிடைக்க வேண்டுமெனவும் நூலாசிரியரின் இப் பணி தொடர வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.



## ஆசிரியரின் செய்தி.....

திருமதி.அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்.

இன்று உங்களின் கைகளில் தவழுகின்ற "வீரகத்தி விநாயகரும் கொல்லங்கலட்டிக் கிராமமும்" என்ற மலர் வெளியிடப்படுவது எனக்கு பெருமை மிகு நிகழ்வாகும்.

நான் தவழ்ந்தும், நடந்தும், விளையாடியும் வாழ்ந்த இக் கிராமத்தின் நினைவுகளின் பதிவாக இந்த மலர் வெளி வருகின்றது. வீரகத்தி விநாயகர் கோவில் வடக்கு வீதியில் உள்ள கொண்டல் மரமும் வில்வ மரமும் இன்றில்லாத போதும் மனதில் பசுமையான நினைவுகளாக இன்றும் உள்ளன. வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஏரம்புவாத்தியார் ஏடு தொடக்க கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையில் எனது ஆரம்பக் கல்வி ஆரம்பமாகி மகாஜனக் கல்லூரியில் உயர்கலவி முடிவடைந்து பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்யும் வரைக்கும் நான் வாழ்ந்த இக்கிராமம் எனது வாழ்வின் மறக்கமுடியாத காலப்பதிவாகும்.

உயிரும் உடலுமாக இருந்த இக்கிராமம் போரின் வடுக்களைத் தாங்கி அழிந்து போன கட்டிடங்களும் இடிந்து போன வீடுகளுமாக அடர்காடாக மாறிய சோகம் பசுமையாக களைகட்டி நின்ற எமது கிராமத்தை மீளப்பார்க்க வைத்தது.

எமது கிராமத்தின் உன்னதத்திற்காக தமது பொருளையும் சேவையையும் அர்ப்பணித்த பெரியோர்கள், வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வரலாறு என்பவற்றை நாம் எழுத்தில் வடிக்காவிட்டால்

புதிய வரலாறுகள் கால ஓட்டத்தில் உருவாகிவிடும். அதனால் நான் இம் மலரை வெளியிட விரும்பினேன்.

போரினால் இடிபாடுகொண்டிருந்த எமது வீரகத்தி விநாயகர் ஆலயத்தை பலநாடுகளிலும் பல இடங்களிலும் வாழும் எமது கிராமத்து பெருமக்கள் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கு நிதி உதவிகளையும், பொருளுதவிகளையும் அளித்து இன்று ஆலயத்தை பழையவடிவிற்கே கொண்டு வந்துள்ளமை பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எழுச்சிமிக்க கிராமமான கொல்லங்கலட்டியின் வளர்ச்சியில் தர்மசாதனமாக மடங்களை அமைத்த முதலியார் என அழைக்கப்படும் சங்கரப்பிள்ளை விசுவநாதரும் சைவப்பிள்ளைகளுக்கான கலா சாலையை உருவாக்கிய ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்களும் நினைவு கூரத்தக்கவர்கள் ஆகும். தமிழர்களின் தேவைகளை அன்றே அறிந்து அரசியலில் கம்பீரமாக 1947ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கோப்பாய் தொகுதியில் வெற்றியீட்டி ஆணித்தரமாக கருத்துக்களை பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறி நம்பிக்கை நட்சத்திரமாக வாழ்ந்த வழக்கறிஞர் குமாரசாமி வன்னியசிங்கம் வீரகத்திவிநாயகர் அருளால் எம் மண்ணிற்கு கிடைத்தவர். இவரது தந்தையார் வன்னியசிங்கம் என்ற ஆண்மகவு கிடைத்த மகிழ்வில் கொல்லங்கலட்டி கிராமம் எங்கும் ஒலிக்கக் கூடியதாக ஒரு காண்டாமணியை வீரகத்திவிநாயகர் ஆலயத்திற்கு வழங்கினார் என்பதை நான் வழிவழிக் கதையாக அறிந்து கொண்டேன். தெல்லிப்பழை வைத்தியசாலையில் கட்டிடங்கள் அமைத்து மக்களுக்கு சேவை ஆற்றியதுடன் ஆன்மீக வாழ்வில் நிறைவுகண்ட வைத்திலிங்கம் சரவணமுத்து அவர்களையும் நாம் நன்றியுடன் நினைவுகொள்ள வேண்டும்.

சான்றோர்களையும் சாதனையாளர்களையும் அன்று நாம் பெற்றிருந்தது போல் இன்றும் இளைய தலைமுறையினர் எமது

கிராமத்தின் வளர்ச்சியில் கரிசனையாக இருக்கின்றனர் என்பது நிறைவைத் தருகிறது. வீரகத்தி விநாயகர் ஆலய சித்திரத்தேரை மீண்டும் பல லட்சம் ரூபா செலவில் அமைத்துத் தந்த விவேகானந்தன் ஹரிகரன் தேர்கொட்டகையை செப்பனிட்டு உதவிய வேலுப்பிள்ளை உபாத்தியாயர் குடும்பம் என்றும் பெருமைக்குரியவர்களே. ஆலயத்தின் முன்புறத்தை அழகுபடுத்த பிள்ளையார் முகப்பையும் சிவன் முகப்பையும் முறையே கட்டி உதவிய மாணிக்கவாசகர் குடும்பமும், அப்பாப்பிள்ளை கணேசலிங்கமும் எமது கிராமத்தின் எழுச்சியை நோக்கி பயணிக்க உதவியமையை மறக்க முடியாது.

ஆலய வளர்ச்சியில் பல உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கி மீண்டும் ஆலயத்தை விரைவாக கட்டி எழுப்பிய பெயர் குறிப்பிடாத எமது உறவுகள் அத்தனை பேரும் நினைவுக்குரியவர்களே. இடிந்தும் அழிந்தும் போன எமது கிராமத்தை மிடுக்குடன் பழைய நிலைக்கு கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை நிறையவே எனக்குண்டு.

என்னால் முடிந்தளவில் இம் மலரினை வெளியிட்டு முன்னோர்களின் சேவைகளை ஆவணப்படுத்தியது எதிர்கால சந்ததியினர் தொடர்ந்து அவர்கள் வழியில் செல்வார்கள் என்பதற்காகவே. இன்று வெளியிடப்பட்ட இம்மலர் என்றும் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன் கிராமத்தின் வளர்ச்சிக்கு வீரகத்தி விநாயகரின் அருளை வேண்டி நிற்கின்றேன்.

# விநாயகர் வரலாறு

**"எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்"**

தெய்வம் ஒன்று. அதன் உருவ பேதம் அநந்தம். ஒன்று விநாயகக் கடவுளாகிய திருவுருவபேதம். இவர் பிரணவ சொரூபி. ஆன்றோரும் பிரணவத்திலிருந்துதான் உலகம் உண்டாயிற்று என்பர். ஆதலால் மக்கள் எந்தத் தொழிலைத் தொடங்கு முன்னும் விநாயகப் பெருமானைத்தான் வழிபட்டுத் தொடங்குவது வழக்கம்.

இவர் தோற்றத்தைப் பல புராணங்கள் பலவகையாகக் கூறும். நமக்கு ஆதாரமாகக் கொள்ளத்தக்க வகையில் கூறும் புராணங்கள் இரண்டு. ஒன்று கந்தபுராணம். இன்னொன்று காஞ்சிப் புராணம் மிகப் பலத்த பிரமாணமாகவுள்ளது. நம் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பாடல் ஒன்று.

## தோற்றுவாய் :

விநாயகர் (வி+நாயகர்) என்றால் தமக்குமேல் ஒரு தலைவர் இல்லாதவர் என்பதாகும். இவர் திருமேனி ஞானமயமானது. இச்சையினால் மேற்கொண்ட திருமேனி தன்னைப் பக்தி சிரத்தையுடன் வழிபடும் அன்பர்களுக்கு நாளும் அருளை வழங்கிவரும் வள்ளல். எங்கும் நிறைந்துள்ளவர். எல்லாப் பொருள்களிடத்தும் கலந்து நிற்பவர்.

## விநாயகர் தோற்றம் :

1. பரமசிவனும் பார்வதி தேவியாரும் ஒரு சமயம் திருக்கயிலையில் மந்திரங்கள் எழுதியிருந்த மண்டபத்தைச் சார்ந்தனர். அங்கே எழுதப்பெற்றிருந்த பிரணவத்தைக் கண்ணால் கண்டனர். சமஷ்டிப் பிரணவம் பிரிந்து ஆண்டவன் எழுத்தாகிய "அகரம்" ஆண் யானையாகவும், அம்மை எழுத்தாகிய "உகரம்" பெண்

யானையாகவும் மாறின. இரண்டும் சேர்வதுபோல் காட்சியளித்தன. யானைமுகத்தோடு கூடிய விநாயப் பெருமான் தோன்றியருளினார்.

2. திருக்கயிலையிலை நந்தவனத்திலிருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் உற்றுநோக்கினார். பிரணவம் களிறும் பிடியுமாக மாறிப் புணர்ந்தனபோல் காட்சி : விநாயகர் திருவவதாரம் செய்தார்.

"அக்கணத் தாயிடை ஐங்கரத்தவனருள்
முக்கணல் வாயினான் மும்மதத் தாறுபாய்
மைங்கருங் களிறெனும் மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையனோர் சிறுவன்வந் தருளினான்"

கந்தபுராணம் : தட்சகாண்டம்
கயமுகன் உற்பத்திப் படலம் - 148

திருஞானசம்பந்த சுவாமிகள் இதனையொட்டி அருளிச் செய்த திருப்பாடலைக் கவனிக்கவும்.

திருச்சிற்றம்பலம்

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

திருச்சிற்றம்பலம்

**குறிப்பு :**

ஆன்யானையும் பெண்யானையும் கூடிய என்பதும் சிவன் சக்தியுடன் கூடியது என்பதும் அகர உகரங்களாகிய சிவனும் சக்தியும் கூடிச் சுத்தமாயா காரியமாகிய நாதப்பிரணவம் ஆயிற்று என்ற தத்துவத்தை விளக்கவந்த உண்மையொழிய வேறில்லை.

**திருவுருவ விளக்கம் :**

விநாயகருக்கு யானைமுகமும், மூன்று கண்களும், இரண்டு செவிகளும், ஐந்து கரங்களும், பெரியவயிறும், இரு குறுகிய திருவடிகளுமுண்டு. யானைமுகப் பெருமான் பிரணவவடிவினன்

என்பதைக் காட்டும். ஐந்துகரங்கள் தானே ஐந்து கிருத்தியங்களையும் செய்பவன் என்பதனை விளக்கும். மூன்று கண்கள் சூரிய, சந்திர, ஆக்கினிகளை உணர்த்தும் விசாலமான இரண்டு செவிகள், ஆன்மாக்களை மலவாதனை தாக்காமல் காத்து வினைவெப்பத்தைப் போக்கியருளும் என்னும் உண்மையை யுணர்த்தும். பெரு வயிறு எல்லா அண்டங்களும், உயிர்களும் தன்னுள் அடங்கியுள்ளன என்ற தத்துவத்தைக் குறிக்கும்.

## விநாயகரது பழமை :

வேதங்களுள் “ருக்வேதம்” மிகப் பழமையானது. அதில் “கணானாம் த்வாம் கணபதிம் அவாமஹே” என்று கணபதி பேசப்படுகிறார். சிலர் இப்பெயர் தேவர்களுக்குள் உள்ள 18 வகையான கணங்களின் தலைவனான இந்திரனைக் குறிக்கும் என்பர். ஆயினும் அவ்வேதம் எவ்விதத்திலும் இந்திரனைக் கணபதியாகப் பேசவில்லை ஆதலால். அது அவனைக் குறிக்காது. கணங்களுக்குத் தலைவர் கணபதி இவர் “பிரஹ்மணஸ்பதி” என்றழைக்கப்படுவார். தைத்ரீய ஆரண்யத்தில் இறைவனைத் தந்திந் என்று கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் தந்தத்தையுடையவர் என்பதாம். ஆகவே இச்சொல் விநாயகரையே குறிக்கும் எனலாம். “கணபதி காரியத்ரி” மந்திரத்தாலும் “தந்நோ தந்திந் பிரசோதயாத்” என்று “தந்திந்” என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதால், இவர் பழமையை குறிக்கும். இன்னும் பல சான்றுகளுமுண்டு.

## விநாயக விரதங்கள் :

இப்பெருமானுக்குரிய விரதங்கள் மூன்று. ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக்கிழமையும், விநாயக சஷ்டியும், ஒவ்வொரு மாதத்திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியுமாம். சிறப்பாக ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தியுமாம். இதனையே மக்கள் முக்கியமாக உலகமெங்கும் “விநாயக சதுர்த்தி” என்ற பெயராலும் வழங்கி வழிபட்டு வருகிறார்கள் என்பது கண்கூடு.

ஒரு சமயம் உமாதேவியாரே விநாய மந்திரமாகிய ஏகாட்சர மந்திரத்தை உபதேசமாகக் கேட்டு விநாயகரை உபாசித்து வந்தார். அது சமயம் விநாயகப் பெருமானும். ஆறு திருக்கரங்களோடும், யானைமுகத்துடனும் வெண்ணிறமான குழந்தையாகப் "பாலசந்திர விநாயகா" என்ற திருநாமத்துடனும் அம்மைக்கு மகனாகத் தோன்றினார். அந்நாள் ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும், சோமவாரமும், சிம்மலக்கினமும் கூடிய நன்னாள்.

## வழிபாடு :

விரதத்தை அனுட்டிக்க வேண்டியவர்கள் விநாயக சதுர்த்தியன்று காலை புற்று மண்ணால் விநாயகப் பெருமான் திருவுவத்தை அமைத்து, அதில் அப்பெருமானை மந்திரத்தால் எழுந்தருளப்பண்ணி அலங்கரித்து, நிவேதனப் பொருட்களை அவர் முன் வைத்து போற்றி அப்பெருமானைத் துதித்தல் முக்கிய வழிபாடாகும். அப்பெருமானுக்குரிய மலர்கள், கொன்றை, தும்பை, வன்னி, எருக்கு, அறுகு முதலியன. வாழை, மா, பலா, கரும்பு, அப்பம், மோதகம், எள்ளுருண்டடை, அவல், பொரி விளாம்பழம் முதலியன அவரது நிவேனப் பொருட்கள். மறுநாள் மேற்படி திருவுருவத்திலுள்ள மூர்த்தியை உத்வாசனம் செய்து அவ்வுருவத்தை ஒரு குளத்தில் விட்டு விட வேண்டியது. வேண்டுமானால் அடுத்த வருடம் சதுர்த்தி வரை வைத்திருக்கலாம். ஆனால் பூசை தினமும் நிகழ்தல் வேண்டும்.

## விநாயகர் வகை :

இவர் திருவுருவங்கள் 32 வகை என நூல்கள் கூறும் பால கணபதி, தருணகணபதி, பக்தி கணபதி, வீரகணபதி, சக்திகணபதி, துவிஜகணபதி, சித்திகணபதி, உச்சிஷ்டகணபதி, விக்னகணபதி, ஹப்பிரகணபதி, ஏரம்பகணபதி, லட்சுமிகணபதி, மகாகணபதி, விஜயகணபதி, நிருத்தகணபதி, ஊர்த்துவகணபதி, ஏகாட்சரகணபதி, வரகணபதி, திராயட்சரகணபதி, ஹப்ரப்ரசாதகணபதி, ஹரித்ராகணபதி, ஏகதந்தகணபதி, சிருஷ்டிகணபதி, உத்தண்டகணபதி, ருணமோசனகணபதி, துண்டிகணபதி, துவிமுககணபதி, மும்முககணபதி, சிங்ககணபதி, யோககணபதி, துர்க்காகணபதி, சங்கடஹரகணபதி என்பன. (நன்றி - சேத்திரவரலாறு)



அமரர் சிவஸ்ரீ.அம்பலவாணக் குருக்கள்

# மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோயில் வரலாறு

சைவத்திரு.பொ.அம்பலவாணக்குருக்கள்

எட்டாம் நூற்றாண்டளவில் சோழ குலத்தவனாகிய திசை உக்கிரகசோழனது மகளாகிய மாருதப்புரவீகவல்லி என்பாள் தனது குன்மநோயும், குதிரை முகமும் மாறப் பெறாது மனம் வருந்தி சாந்தலிங்க முனிவரிடம் சென்று தனது குறையினை முறையிட அவர் தீர்த்தயாத்திரை செய்வதினால்தான் இவ்வித கன்மநோயானது நீங்குமென்று சொல்ல அவ்வண்ணமே தீர்த்த யாத்திரை செய்தாள்.

மாருதப்புரவீகவல்லி ஈழநாட்டின் வடபாலுள்ள கீரிமலை என்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தும் கோயிற்கடவை என்னும் இடத்திலே சுப்பிரமணியப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து, சோழ நாட்டிலிருந்து சுப்பிரமணிய விக்கிரகமும், பூசை செய்வதற்கு அர்ச்சகரையும் வருவித்து உரிய முறைப்படி பிரதிட்டை செய்து வழிபடக் குன்ம நோயானது நீங்கப் பெற்றும், குதிரை முகம் மற்றவர்களுடைய பார்வைக்கு மாறியும், மாருதப்புரவீகவல்லியின் பார்வைக்கு மாறாதிருந்தமையாலும் மனம்வருந்தி அதற்குரிய காரணத்தை ஆராயும் போது, விநாயகப் பெருமானை முதல் வழிபாடு செய்யாததினாலேயே இக்குறையானது நிகழ்ந்தது என அறிந்து, தான் செய்த தவறிக்காக ஏழு விநாயக விக்கிரகங்களைப் பிரதிட்டை செய்வேன் என நினைத்து முதலாவதாகக் கொல்லங்கலட்டி என்னும் இடத்திலே ஒரு விநாயக விக்கிரகத்தினையும், பின் வரத்தலம் (பன்னாலை) அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை (அளவெட்டி) என்னும் இடங்களில் ஒவ்வோர் விநாயக விக்கிரகத்தினையும் பிரதிட்டை செய்யக் குதிரை முகமானது தனது பார்வைக்கும் இல்லாது மறைத்து அதிக அழகுடன் முகமானது பொலிவதைக் கண்டு அத்தலத்திற்கு பெருமாக்கடவையென்னும் காரணப் பெயரையும் (பெரிய குதிரை முகம் நீங்கிய இடம்) இட்டு, தான் செய்த சபதத்தின்படியே ஆலங்குழாய், கல்வளை என்னும் இடங்களிலும் இரு உருவங்களை தாபித்தார் என்பர்.

முதலாவதாக மாருதப்புரவீகவல்லி தாபித்த விநாயகப் பெருமான் இப்பொழுது கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்து மேற்கு வீதியிலிருக்கும் கேணியின் வாசலில் நின்ற ஒரு ஆழமர நிழலிலே நீண்ட காலமாக வீற்றிருந்தார். பின்னர் இருநூறு வருடங்களுக்கு முன் குமாரவேலு என்பவர் தனது வீட்டின் ஒரு பகுதியில் அப்பெருமானை வைத்து (அந்த வீடு தற்பொழுதுள்ள ஆலயத்து உள் வீதியின் தென்மேற்குப்பகுதியிலிருந்தது) பூசித்து வந்தார். சிறிது காலஞ்செல்ல வீட்டில் வைத்து வணங்குவது ஆசௌசம் முதலிய ஆசாரக் குறைவான காலங்களில் கஷ்டமாக இருந்ததால், தற்பொழுது பூங்கொல்லையாக இருக்கும் காணியில் மேற்குப் பக்கத்தில் ஒரு சிறு ஆலயம் மண்ணினால் அமைத்து, அதனுள் வைத்துக் குமாரவேலுவினுடைய மகன் பொன்னையா என்பவர் வழிபாடு செய்து வந்தார்.

அதன் பின்னர் பொன்னையாவினுடைய இளைய மகனும் நிர்வாண தீட்சை ஆசாரியாபிடேகம் பெற்றவரும் சமய சாத்திர ஆகம அறிவு நிரம்பப் பெற்றவருமாகிய அம்பலவாணக் குருக்கள் என்பவர் விநாயகப்பெருமானுக்கு ஆகம முறைப்படி ஆலயம் அமைத்து நித்திய நைமித்தியங்கள் செய்ய வேண்டுமென்ற விருப்பத்தினாலே தனது தந்தையாராகிய பொன்னையாவினுடைய சொந்தமாக இருந்த காணியையும், தம்ப உடையார் என்பருடைய பக்கத்துக் காணியையும் தானே பராபரிப்புக் காரனாக இருந்து சகல காரியங்களையும் செய்யக்கூடிய அதிகாரத்தோடு விநாயகப்பெருமான் மீது தரும சாதனமாக எழுதுவித்து அக்காணியுள் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், தம்பமண்டபம், மடைப்பள்ளி, களஞ்சியம், முதலிய மண்டபங்களையும் உள்வீதி, புறவீதி ஆகிய இரு வீதிகளையும் திருமஞ்சனக்கிணற்றையும் அமைத்து ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு ஆங்கிரச வருடம் வைகாசி மாத அத்த நட்சத்திரத்திலே கும்பாபிஷேகம் செய்து அத்தினத்தினை முதலாகக் கொண்டு ஒவ்வொரு வருடமும் அலங்காரத் திருவிழாவினையும், புரட்டாதி மாதத்திலே நரவாத்திரி விழாவினையும் மிகச் சிறந்த முறையிலும் ஏனைய விசேட காலங்களிலே செய்ய வேண்டிய விழாக்களையும் செய்து வந்தார்.

ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றாம் ஆண்டளவில் ஆண்டளவில் அம்லவாணக்குருக்கள் இறைவனடி சேர, கோயில் தம்ப மண்டபமும் வாயு பகவானுடைய கோபத்திற்கு இரையாகி இடிந்துவிழ, குருக்களுடைய புத்திரர்கள் குழந்தைப்பருவத்தினராதலால் திருவிழா முதலிய நைமித்தியங்கள் நடைபெறாது சிறிது காலம் சென்றது. பின்னர் கொல்லங்கலட்டியிலும் சுற்றுப்புறத்திலுமுள்ள பெரியோரது ஆதரவினாலும், உற்சாகத்தினாலும் மேற்படி குருக்களது புத்திரர்களாகிய பொன்னையா வயித்திலிங்கம் என்போர் பழையபடி தம்பமண்டபம், யாக, வசந்த மண்டபம் கோபுரம் முதலியன அமைத்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு, சுக்கில வருடம் தம்பம் அமைத்துக் கொடியேற்று விழாவினைச் செய்து ஆனி மாதத்து அமாவாசைக்கு முதல் நாள் தேரினையும், அமாவாசையிலன்று தீர்த்தோற்சவத்தையும் செய்து வந்தனர். பின்னர் அதை மாற்றி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு தாது வருடம் முதல் வைகாசி மாதத்துப் பூரணையில் தீர்த்தோற்சவமாக அமையும் வண்ணம் பத்துநாள் திருவிழா நடைபெற்று வருகின்றது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு தாது வருடம் சுப்பிரமணியர், மகாலட்சுமி, சந்தான கோபாலர் முதலிய பரிவாரங்களுக்கு ஆலயங்கள் தனித்தனி அமைத்து அம்மூர்த்திகளைப் பிரதிட்டை செய்தும், நாற்பத்தோராம் ஆண்டு விக்கிரம வருடத்திலே கெர்ப்பக் கிருகம், அருத்த மண்டபம் இரண்டினையும் வைரக் கல்லினாற் செய்து பங்குனி மாத்து அத்த நட்சத்திரத்திலே கும்பாபிடேகம் செய்யப்பெற்றது. தேர்த்திருப்பணிச் சபையோரால் புதிதாக அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய தேர் ஒன்று அறுபத்தைந்தாம் ஆண்டு குரோதி வருடம் பங்குனி மாதத்திலே செய்து முடிக்கப் பெற்று, வெள்ளோட்டமும் ஓடி அடுத்த வைகாசி மாதம் முதல் ஒவ்வொரு வருடமும் அத்தேரிலேயே விநாயகப் பெருமான் வீதி வலம் வருகின்றார்.


நன்றி - அருள் ஒளி

# கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய வளர்ச்சியில் சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்களின் பங்கு"

திருமதி.அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்.

இலங்காபுரியின் வடபுலத்தல் அமைந்துள்ள தண்பொழில் சூழ் கொல்லங்கலட்டி எனும் கிராமத்தில் 8 ஆம் நூற்றாண்டில் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி விநாயகர் பிரதிஸ்டை செய்ய விரும்பினார் என்றும் அச்சூழலில் உள்ள ஆலமரத்தடியில் விநாயகர் திருவுருவை அமைத்து பிரதிஷ்டை செய்து வைத்தார். என்பதும் வரலாறு கூறும் உண்மையாகும். அத்திருவுருவை வீரகத்தி விநாயராக தியான பூசை செய்து வழிபட்டு வந்த மெய்யடியார்களில் ஒருவரான அம்பலவாண தேசிகரின் பரம்பரையில் பிறந்து கொல்லங்கலட்டி வாழ் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர் சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள். தோளில் உத்தரியம், நெற்றியில் என்றும் நிலையான வீபூதிக்குறிகள், சந்தனப்பொட்டு, கருணை பொழியும் கண்கள், தீட்சண்ணியமான சிந்தனை காட்டும் முகம் இன்றும் மறக்க முடியாத அவர் உருவம்.

கொல்லங்கலட்டியில் எல்லோராலும் மதிக்கப்படும் சைவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் சுப்பிரமணியத்திற்கும் தெய்வானைப் பிள்ளை அம்மாவிற்கும் மகனாக 01.02.1951 ஆம் ஆண்டு ஜனனம் ஆனவரே சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள் ஆவார். இவர் தமது ஆரம்ப கல்வியை கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் உயர் கல்வியை மகாஜனக் கல்லூரியிலும் கற்றுத்தேறினார்.



அமரர் சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள்

புராணபடனம் படித்தல், வேதசிவாகமப் பயிற்சி, சிவபூசை நியமங்கள், மகோற்சவம் கும்பபாபிசேகப் பயிற்சிகள் எல்லாவற்றையும் குருகுல முறையில் மாமனாரான பொன் அம்பலவாண தேசகரிடம் கற்றுணர்ந்தார். சைவ ஆகமங்களிலும் சைவ சித்தாந்த உண்மை களிலும் கொண்ட அறிவுப்புலன் காரணமாகவும், அம்பலவாண தேசிகர் எழுதிக் கொடுத்த மரண சாதன ஆலய உரிமை காரணமாகவும் 1976 ஆம் ஆண்டு கொல்லங்கலட்டி விநாயகர் ஆலய பூசகராகவும், பரிபாலன உரிமையாளராகவும் பணி புரியத் தொடங்கினார்.

வேதாகமங்களை முறைப்படி உணர்ந்து இவ்வாலயத்தில் தினமும் மூன்று காலப் பூசைகளை சிறப்புற நடாத்தினார். புண்ணிய காலத்தில் விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற ஆவன செய்தார். இவரது மாமனாரான அம்பலவாணக் குருக்களின் பின்னர் இவ்வாலயத்தில் கொடியேற்ற மகோற்சவத்தை சிறப்புற செய்த பெருமை சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்களையே சாரும்.

இவரது சிவ பக்தியின் காரணமாக விநாயகர் ஆலயத்தில் சிவன் திருவுருவை பிரதிஷ்டை செய்து கிழக்குப் புறத்தில் வாயில் ஏற்படுத்தி கொடிமரத்தையும் அமைத்து சிவபக்தர்களின் வழிபாட்டிற்கு வழிசமைத்த பெருமை இவருக்குரியதாகும்.

சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள் சமயக்கரியைகளுக்கு காரணகாரியம் கூறுவதில் வல்லவராக இருந்ததுடன் சமூகத்தின் தேவைகளையும் நிறைவு செய்து வந்துள்ளார். ஜோதிடம் பார்த்தல், நாள், திதி பார்த்தல் போன்றவற்றை கணித்து கிராமமக்களின் வேண்டுதல்களை மகிழ்வுடன் பூர்த்தி செய்வார்.

தான் பிறந்து வளர்த்த கிராமமான கொல்லங்கலட்டி மக்களின் வாழ்க்கையிலும், ஆலயத்தின் வளர்ச்சியிலும் அபரீதமான பற்று வைத்திருந்தமையால் ஆலயமும் வளர்ந்தது, மக்களின் வாழ்வும் உயர்ந்தது.

ஆயினும் 1992 ஆம் ண்டு வரை சிறிய பிரச்சினைகளுக்கு மட்டும் முகம் கொடுத்து வெற்றியீட்டிய போதும் ஆவணி மாதம் 20 ஆம் திகதி ஏற்பட்ட இடப்பெயர்வில் வலி வடக்கின் பெரும் பகுதியை விட்டு மக்கள் வெளியேறினர். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொல்லங்கலட்டிக் கிராமம் முற்றாக தன்னையிழந்த நாட்டின் அசாதாரண நிலைமை மக்கள் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கியது. காலம் புரண்டோட வாழ்க்கைப் பயணங்களும் மாற மக்கள் வாழ்வும் திசை மாறியது.

எழில்மிகு கொல்லங்கலட்டிக் கிராமம் பற்றைக் காடுகளும், நெடிதுயர்ந்த இப்பிலிப்பில் மரங்களுமாக புதிய கோலத்தைப் பெற்றது. போகும். பாதைகள் முட்புதர்களுடன் சிறிய காடாக மாறியிருந்தது. 1996 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலைமாற்றத்தின் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் குடாநாடு கொண்டுவரப்பட்டது. அழிந்து போன கிராமங்களும், சிதைந்து போன கட்டிடங்களுமாக குடாநாட்டின் பல பகுதிகள் மாறியிருந்தன.

இந்நிலையில் சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்களின் தாகம் தனது விநாயர் ஆலயத்திற்கு எப்படியும் செல்ல வேண்டும் என்பதாகவே இருந்தது. மக்கள் நடமாட்டமற்ற ஏகாந்தமான காங்கேசன்துறை வீதியின் பக்கமாக கண்ணுக்கெட்டிய தூரம் வரை காடாக இருந்த அரசடிப் பாதையில் சென்று ஆலயத்திற்கு பூசை செய்ய வேண்டுமென்ற அவாவினால் இராணுவத்தினரின் அனுமதியைப் பெற்று உள்ளே சென்ற குருக்கள் ஐயாவை மறக்க முடியாது.

மக்கள் வாழாத ஆலயச்சூழலுக்கு செல்வதற்கு துணையாக தனது மனைவி கமலாதேவியையும் துணிந்து அழைத்துச் சென்றார். அவருக்கிருந்த மும்மொழிப்புலமை படையினருக்கு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. இராணுவத்தினருடன் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு மேலாக உள்ளே சென்று அங்கே நாள் முழுவதும் தங்கியிருந்து விநாயகருக்குப் பூசை செய்து மாலை இராணுவத்தினருடன் திரும்பி வந்து கொண்டிருந்தவர். படிப்படியாக மக்களையும் அழைத்துச் சென்று ஆலயத்தின் முக்கிய தினங்களை

சிறப்பாக செய்து வந்ததுடன் கோவில் திருவிழாக்களையும் நடத்தினார். ஆலயம் பல இடிபாடுகளைக் கண்டிருந்தமையால் புனருத்தாரணம் செய்ய வேண்டிய கட்டாயமாகியது. குருக்கள் ஐயா அவர்கள் நிதி வசதியற்ற நிலையில் அன்பர்களிடம் நிதியைப் பெற்று சிறிது சிறிதாக கோவிலைத் திருத்த் தொடங்கினார். ஆலயததின் நித்திய பூசைகளை கிராமாக செய்ததுடன் ஆலயமும் புதிய பரிமாணத்துடன் வளர்ந்து வருவதற்கு அரும்பாடுபட்டார் என்பதை இன்றைய புனருத்தாண சபையினர் நன்கு உணர்ந்துள்ளனர்.

அவரது உடல்நிலை சீராக இல்லாத போது அவருக்குத் துணையாக ஆலய கருமங்கள் அனைத்திலும் தோள் கொடுத்து நின்ற அவரது மனைவி கமலாதேவியின் சேவையை மறக்க முடியாது. கொல்லங்கலட்டிக் கிராமம் தனது சேவையையும் மக்களையும் இழந்து நின்ற வேளை விநாகரின் துணையே பெரிதென நினைத்து தன்னலமற்ற தொண்டினை புரிந்த குருக்களும் அவரது துணைவியாரும் மக்களால் என்றும் நினைவு கொள்ளப்பட வேண்டியவர்கள்.

இன்று கொல்லங்கலட்டி மக்கள் கிராமத்தில் குடியேறி இவ்விடங்களை சீராக அமைத்து வாழத் தொடங்கியமைக்கு அவரது கோவிற்பணியே காரணமெனலாம். தங்கள் குல தெய்வமான விநாயகர் ஆட்சி செய்யும் பிள்ளையார் கோவிலின் குருக்களவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வதற்கு புனருத்தாரண சபை அமைக்கப்பட்டு அவரது கனவை நனவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

குருக்கள் ஐயா 2013 இல் இறையடி சேர்ந்த பின்னர் நித்திய நைமித்திய கருமங்களை செய்வதற்காக 13.07.2014 இல் புனருத்தாரண சபையால் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ஐயா அவர்களின் துணைவியாரிடம் பொறுப்பை ஒப்படைப்பதற்கு அடியார்கள் பரிந்துரைத்தமையால் இன்று தனது கணவர் விட்டுச் சென்ற பணியை பொறுப்பேற்று செய்து வருகின்றார்.

புனருத்தாரண சபையினர் கோவில் புனருத்தாரண வேலைகளை பொறுப்பேற்று உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள அடியார்களின் அனுசரணையுடன் ஐயா அவர்கள் விட்டு சென்ற பணியை செவ்வனே செய்துள்ளனர். வீரகத்தி விநாயகர் ஆலயம் சீரான கட்டிட அமைப்புடன் புதுப்பொலிவு பெற்றுள்ளது. முற்றாக நிறைவேற்ற இன்னும் சிலபணிகளைத் தொடர வேண்டியுள்ளது.



எங்கும் நிறைந்த எமது அடியார்களின் ஆதரவுடன் மீண்டும் வீரகத்தி விநாயகர் ஆலயம் எங்கள் கிராமத்தில் எழுச்சி பெறும். விநாயகரின் அருளாட்சியும் என்றும் எமது மக்களுக்கும், கிராமத்திற்கும் கிடைக்கும்.



# வீரகத்திர விநாயகர் ஆலயத்தில்நடைபெற்ற விழாக் காட்சிகள்





## "விநாயகப் பெருமான் அடி தொழுவோம்"

மாணிக்கவாசகர் மண்டலநாயகம் (காந்தி)
கொக்கன், கொல்லங்கலட்டி.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்

எனவே அவன் திருவடிகள் பணிந்து மனங்கசிந்து வணங்குங்கள் என்றுபாடி மகிழ்வார்கள். இந்து சமயம் சைவம் வைணவம் சாக்தம் கௌரம், கௌமாரம் கணபதேயம் என்ற பல மதக்கூறுகளை தன்னுள் அடக்கியுள்ளது. கணபதேயம் என்பது கணபதியாம் விநாயகனை முழுமுதற் கடவுளாக கொண்டது. ஆயினும் எந்தப் பிரிவும் விநாயகனுக்கே முதல் வணக்கம் செலுத்துகிறது. ஆலயத்தில் முதல் பூசை அவருக்கே. எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் பிள்ளையாரை வணங்கித் தேங்காய் உடைத்துத் தொடங்குவதே சம்பிரதாயமாகும்.

ஆலமர நிழலில்களிலே அமர்ந்தும் ஆலயங்களில் பல்வேறு ரூபங்களிலும் அருள்புரிவது மட்டுமல்ல சாணகத்தினால் அல்லது மஞ்சளினால் பிடித்து அறுகம்புல்லாலும் செருகிய பிள்ளையார் என வழிபடும் போதும் அவர் அருள் கிடைக்கும். அத்தகைய விநாயகருக்கான ஆலயங்கள் கிராமங்கள் தோறும் உருவாகின. சில கிராமங்களில் நான்கு திக்குகளிலும் பிள்ளையார் ஆலயங்களைக் காணலாம்.

கொல்லங்கலட்டி வன்னியசிங்கம் வீதியில் அமைந்துள்ள வீரகத்தி விநாயகர் கோவிலும் பழம்பெருமை வாய்ந்தது. நகுலேஸ்வரம் மாவிட்டபுரம் என்ற புண்ணியத் தலங்களைத் தனதருகே கொண்டது. அக்கோவிலுக்கு தனிப்பட்ட சிறப்பு உண்டு. இவ் ஆலயம் சோழநாட்டு

இளவரசி மாருதப்புரவீக வல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபட்ட விநாயகர் விக்கிரகத்தை வைத்தே உருவாக்கப்பட்டுள்ளது.

பிறவியிலேயே குதிரைமுகம் கொண்ட சோழ இளவரசி மாருதப்புவீகவல்லி ஈழநாட்டிற்று வந்து கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி முருகனை உபாசனை செய்தாள். ஒரே நிரையில் மாவிட்டபுரம் முதலாகத் தென்திசைநோக்கி ஐந்து கோவில்களில் முருகனது விக்கிரகங்களை ஸ்தாபித்து வழிபாடு செய்தாள். அவளது நோயும் குதிரை முகமும் மற்றவர்கள் பார்வையிலிருந்து நீங்கியது. ஆனாலும் அவளது சொந்த நினைவிற்கும் பார்வைக்கும் அம் முகம் நீங்கப் பெறவில்லை. இதற்கான காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்த போது முதலில் விநாயக ஆராதனை செய்யாமல் முருகவழிபாடு செய்ததே தவறு எனப் பெரியோர் எடுத்துக் கூறினர். அனை அறிந்து மனம் வருந்திய மாருதப்புரவீகவல்லி விநாயகப்பெருமானை வழிபட உறுதிபூண்டாள்.

விநாயகப் பெருமானை மனதார வணங்கி தான் செய்த பிழைக்காக ஏழு இடத்தில் விநாயப் பெருமானை பிரதிஷ்டை செய்வதாக உறுதி பூண்டாள். கொல்லங்கலட்டி முதலாக தென்திசை நோக்கி ஒரே திசையில் விக்கினேஸ்வரனை பிரதிஷ்டை செய்தாள். கொல்லங்கலட்டி, வருத்தலம், அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை என்பனவே பிரதிஷ்டை செய்யப்பட்ட தலங்களாகும். அவற்றுள் மத்திய ஸ்தலமாகிய கும்பளாவளையில் விக்கினேஸ்வர பூசை முடிந்தவுடன் அவரது சொந்தப் பார்வைக்குக் குதிரைமுகம் நீங்கியது என்று சொல்லப்படுகின்றது. மாருதப்புரவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமையும் சிறப்பும் கொல்லங்கலட்டி விநாயகப் பெருமானுக்கு உண்டு.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த மக்களாலும் சூழ அமைந்த கிராமங்களைச் சேர்ந்தவர்களாலும் போற்றி வணங்கப்பட்ட திருத்தலம்

இதுவாகும். கீரிமலை நோக்கிய பயணிப்போரும் வழிபடுவர். மக்கள் வாழ்விலும் அமைதி சூழ்ந்திருந்த காலத்தில் ஆலய வழிபாடும் மேன்மை பெற்றிருந்தது. காலத்தின் கோலத்தால் மக்கள் வாழ்வும் சிதைவுற்றது. கோவில்களும் சிதைவடைந்தன. ஆயினும் இறைவன் அருளால் மீண்டும் எழுச்சி பெறும் காலம் உருவானது. வீழ்ச்சியும் எழுச்சியும் இறைவன் சித்தம் போலும்.

மீள்குடியேற்றத்தின் பின் தமது வீடுகளை திருத்துவதில் காட்டிய ஆர்வத்திலும் தமது ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதில் மக்கள் கூடிய அக்கறை செலுத்தினர். அதன் பயனாக ஆலயங்கள் மீளுருப் பெற்றன. எமது கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் ஆலயமும் சீர்திருத்தப்பட்டது. அதனது புத்தாக்கத்திற்காகப் பலரும் முன் நின்று உழைத்தனர்.

அடியார்கள் முன்வந்து பொருளுதவியும், சரீர உதவியும் வழங்கினர். எமக்கு ஏடு தொடக்கி வைக்கப்பட்ட வீரகத்தி விநாயகர் கோவிலின் முன்புற மண்டபம் சிறப்புற அமைவதற்கு அத் திருப்பணியில் பங்கு கொள்ள கொல்லங்கலட்டி மாணிக்கவாசகர் குடும்பமாகிய எமக்கு கிடைத்த வாய்ப்பை தெய்வனுக்கிரகமாகவே கருதுகிறோம். கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். என்ற பழமொழிக்கு அமைய கோயில்களை சிறப்பித்து வாழ்தல் அவசியமாகும். இதனை உணர்ந்து செயற்பட்ட எம் கிராமத்தவர்கள் நன்றிக்குரியவர்கள்.

மீண்டும் இவ்வாலயத்தில் திருவிழா, சமயவிழாக்கள், விரதகாலப் பூசைகள் சிறப்புற நடைபெறுகின்றன சுக்கில சதுர்த்தியில் விநாயகரை வணங்குவோர். தொல்லைகள் அகன்று நலம் பெறுவர். ஒவ்வொரு மாதமும் தேய்பிறை நான்காம் நாளும் வளர்பிறை நான்காம் நாளும் சதுர்த்தி வழிபாடு நடாத்தப்படும். விநாயகர் சஷ்டி விரதம் கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழிமாத வளர்பிறை சஷ்டி வரையிலான இருபத்தொரு நாட்கள் கொண்ட விரதமாகும். இவ்

விரத வழிபாடுகளை மேற்கொள்வது கஷ்டங்கள் நீங்கி மங்களம் உண்டாக வழியாகும்.

விநாயகரை வணங்க மூன்று முறை நெற்றியிலே குட்டிக் கும்பிடுவது வழக்கம். தோப்புக்கரணம் போட்டு வழிபடுவதும் மிக முக்கியமானதாகும். இதன் மூலம் எமது நரம்பின் சில முனைகள் தூண்டப்பட்டு அறிவும், நினைவாற்றலும் பெருகும் என்பதை தற்போது மருத்துவ விஞ்ஞானமும் ஒப்புக் கொண்டுள்ளது.

சிதறு தேங்காய் அடிப்பது விநாயகருக்கு மட்டும் உரியது. அகங்காரம் என்ற ஓடு சிதறி அறிவு நீரை அர்ப்பணிக்க வேண்டும் என்பது உட்கருத்தாகும். தேங்காயின் வெண்மை சத்துவ குணத்தைக் குறிக்கின்றது. அவருக்குச் சாத்தும் அறுகம்புல் பல மருத்துவ குணங்களைக் கொண்ட மூலிகையாகும். அறுகு, எருக்கம்பூ, வெள்ளெருக்கம்பூ, சூரியகாந்தி, அலரி, மருது, மாதுளை, செண்பகம், பாதிரி என்பன விநாயகர் விரும்பும் மலர்களாகும்.


அவருக்குப் பிடித்த பொருள் மோதகம் ஆகும். அதன் மாவு உடலையும் பூரணம் உயிரையும் குறிக்கின்றது. பல பொருட்களின் கலவை இனிப்பது போல் பூரணம் எனப்படுவது போல பூரண நிறைவான உயிர் முத்தி பெறும். விநாயகர் உயிர்களுக்கு இனியவராகக் கருணை பொழிகின்றார்.

“வி” என்பது சிறப்பைக் குறிக்கும். விநாயகன் என்பது தனக்கு மேலொரு தலைவன் இல்லாதவன் என்று பொருள்படும். அத்தகைய எமது வீரகத்தி விநாயகரை முறைப்படி தொழுது நலம் அடைவோம். ஆலயம் சிறப்புற்று விளங்க தொடர்ந்து செயற்படுதல் அவசியமாகும்.

விநாயகர் துணை


எமது ஆலய பழைய தேர்

1965 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது



2016 ஆம் ஆண்டு

அமைக்கப்பட்ட புதிய சித்திரத்தேர்



# மலர் ஆசிரியர் பார்வையில்......
# வீரகத்திவிநாயகனுக்கு தேர்த்திருவிழா

தேர் பல்வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. எமது சமய, சமூக தத்துவங்களை உணர்த்தும் சின்னமாகவும் கலை உணர்வுகளை வெளிப்படுத்தும் பொக்கிசமாகவும் எமது அடுத்த சந்ததியினருக்கும் விட்டுச் செல்லும் கலைவெளிப்பாடாகவும் விளங்குகின்றது. அத்தோடு ஆண்டவனின் அருளை ஆன்மாக்களுக்கு வாரிவழங்கும் சாதனமாகவும் அமைகிறது என்று கூறலாம்.

தேர் என்பது உடம்பையும் தேரோட்டம் மனித வாழ்க்கையையும் குறிக்கின்றது. தேர்த்திருவிழா பூமியில் வாழ்பவர் உறுதியாகவும் எல்லோரும் ஒன்று கூடி நெருக்கமாக வாழவேண்டும் என்ற சமய, சமூக செயற்பாட்டை நெறிப்படுத்துவனவாகவும் அமைகிறது. மனதை பக்குவப்படுத்தி, மனதில் இறைவனை இருத்தி எவனொருவன் கருமங்களைச் செய்கிறானோ அவனுக்கே ஆத்மஞானம் என்ற நிழற்பேறு கிடைக்கும் என்ற தத்துவத்தை விளக்குவதே தேரும் தேர் உற்சவமுமாகும்.

தேர்த்திருவிழா எமது கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 1929ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சகடையில் தேர் கட்டி நடத்தப்பட்டது. பின்னர் ஊர் மக்கள் விநாயகருக்கு அழகிய தேர் உருவாக்க வேண்டும் என விருப்பம் கொண்டமையால் தேர்த்திருப்பணிச்சபை உருவாக்கினார்கள். இதன் தலைவராக அமரர்.வை.சரவணமுத்து J.P அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர்களுடன் கொழும்பில் உள்ள கொல்லங்கலட்டிக் கிராமத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் விநாயகரின் திருப்பணி வேலைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற பெருநோக்குடன் 1964ம் ஆண்டு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் திருப்பணிச்சபையை அங்குரார்பணம் செய்தனர். இத்திருப்பணிச்சபையின் தலைவராக மண்ணியல் வல்லுனராக பதவி வகித்த சி.கந்தையா அவர்கள் நியமிக்கப்பட்டார். மேலும் இச் சபையினை இயக்குவதற்கு திரு.சி.சங்கரப்பிள்ளை திரு.வ.நடராசா திரு.கு.பாலசிங்கம் போன்ற

எம் ஊர் பெருமக்கள் அயராது உழைத்தனர். கொழும்பு வெள்ள வத்தையில் உள்ள சபையர் தியேட்டரில் "பூம்புகார்" எனும் திரைப்படத்தை திரையிட்டு திருப்பணி வேலைகளை நிறை வேற்றுவவதற்கு வேண்டிய பணத்தைத் திரட்டினர் அவர்கள் கொல்லங்கலட்டி திருப்பணிச்சபையுடன் இணைந்து தமது பணியினை நிறைவேற்றினர்.

இச்சபையினரால் உருவாக்கப்பட்ட தேரில் 1965ம் ஆண்டு வீரகத்தி விநாயகர் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார் 1995ம் ஆண்டுவரை வீரகத்தி விநாயகர் ஆலய வீதியில் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடை பெற்று வந்தது.

தன்னை நாடிவரும் அனைத்து அடியார்களினதும் மலைபோன்ற துன்பங்களை பனிபோல நீக்கி அருள்புரிந்து வரும் வீரகத்தி விநாயகர் குடிகொண்டிருக்கும் இவ் ஆலயத்தின் மகோற்சவம் வைகாசி மாதம் பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு ஆரம்பித்து 10 தினங்கள் விழா நடைபெறும். கொடியேற்றத்தைக் முதலாகக் கொண்டு ஆரம்பித்து 8ம் நாள் சப்பரத் திருவிழாவாகவும் 9ம் நாள் தேர்த்திருவிழாவாகவும் 10ம் நாள் பகல் தீர்த்த திருவிழாவாகவும் இரவு கொடியிறக்க வைபவமும் நடைபெறும். இவ்விழாக்களில் 7ம் நாள் எழுந்தருளி விநாயகப் பெருமானுக்கு சாயரட்சைப் பூசையில் ஊரவர்கள் அதிகமான அபிஷேகம் செய்விப்பார்கள். இக்காட்சி மிகவும் அழகாக இருப்பதுடன் பக்திப் பரவசத்தையூட்டுவதாக அமையும்.

இவ் ஆலயம் 1995ம்ஆண்டு ஏற்பட்ட போர்ச்சூழலால் அழிவடைந்து பாரிய சேதத்திற்குள்ளானது. இந்நிலையில் தேர் சிதைக்கப்பட்டமையால் தேர்த்திருவிழாவும் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் எம் ஆலய புனருத்தாரண சபையின் முயற்சியாலும் மக்களின் பெரும் உதவிகளாலும் தேர் மீண்டும் உருவாக்கப்பட்டது. ஆலயத்திற்கான புதிய சித்திரத் தேரை அமைத்துத்தந்த பெருமகனை ஆலய வரலாறு என்றும் நினைனவு கூரும் இத்தேர் வெள்ளோட்டம் 24.01.2016 அன்று நடைபெற இறைவன் அருள்பாலித்துள்ளான். இந்நாள் கொல்லங்கலட்டி வாழ் மக்களுக்கு ஒரு நன்நாளாகும்.

# "எங்கள் பிள்ளையார்"

சு.துரைசிங்கம்,
நொத்தாரிஸ் வளவு,
கொல்லங்கலட்டி.

"எங்கள் பிள்ளையார்" என்று உரிமையுடன் கூறுவதற்கு திருவருள் பாலித்திருக்கின்றது. உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவி வழங்குவது "எங்கள் பிள்ளையார்" வழிபாடுதானே!

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது நமது முன்னோரது அருமையான திருவாக்கு. இதனுடைய பொருளையும் மாருதப்புரவீகவல்லியால் கொல்லங்கலட்டி வீரகத்திப்பிபள்ளையார் எழுந்தருளியிருக்கும் பதிவையும் அதனையடுத்துத் தெற்கு வீதியில் அவர் தம் திருவருள் நாடி அமைந்துள்ள எங்கள் இல்லத்தையும் உன்னுந் தொறும், மனத்திற்கு ஒரு மகிழ்ச்சியும், வாழ்க்கையில் பெறமுடியாத பேரின்பத்தைப் பெற்றுவிட்ட ஒரு திருப்தியும் எங்களுக்கு ஏற்படுவது உண்டு.

நமது முன்னோர் செய்த அரிய தவத்தின் பயனாகவே, கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகருக்கு நாங்கள் மீளா அடிமைகளாகி இருந்து வருகின்றோம். ஓடி விளையாடும் பருவம் முதல் கிழக்கு வீதியில் அமைந்துள்ள வித்தியாசாலையிற் படித்த நாள் வரை நாங்கள், கோயில் உண்டு என்று வேறு வினை புரியாது வினைகளை வேரறுக்கும் வேழ முகத்தானின் அருட்கடலில் மூழ்கியவாறு காலத்தைக் கழித்ததை நினைவுகொள்ளும் போது மீண்டும் அந்தப்பருவம் வராதா? என மனம் ஆசைப்படுகின்றது! அங்கலாய்க்கின்றது.!

கோயில் மணி அடித்ததும், கண்ணை மூடி, விநாயகருக்கு ஒரு வணக்கம் அல்லது வேட்டியைக் கட்டிக் கொண்டு, எங்கள் வீட்டுவாசலுக்கெதிர் வாசலாக உள்ள கோயில் வாசல் வழியாக ஓடோடியும் சென்று பூசையிற் கலந்து கும்பிடுவோம். திருவிழாக்

காலங்களில் எங்கள் வீட்டு வாசலையே ஒரு கோபுரமாக அமைத்து, நிறைகுடம், குத்துவிளக்கு, தோரணம் வாழை முதியவை வைத்து அலங்கார மேடை அமைத்து வெளி வீதியால் விக்கின விநாயகன் பவனிவரும்போது, தோப்புக்கரணம் போட்டு, வழிபட்டு அருச்சனை செய்து அடியார் கூட்டத்துக்கு முப்பழங்கள், சுண்டல், வடை முதலிய சிற்றுண்டிகள் கொடுத்து அகமகிழ்வோம்.

எங்கள் செல்வம் விநாயகர் தந்த செல்வம். எங்கள் குலப்பெருமை விநாயகர் அளித்தது எங்கள் கல்வி கணபதி தந்தது. எங்கள் வாழ்வும் வேழமுகத்தான் தந்ததுவே! எல்லாம் அவரே!

நித்திரையிலிருந்து எழுந்ததும் விநாயகருடைய எண்ணம் வீட்டைவிட்டு வெளியே வேலையாகச் செல்லும் போதும் விநாயகருடைய எண்ணம். வீட்டுக்கு வரும்போதும் அவருடைய தியானம்! விநாயகருடைய எண்ணத்திலிருந்து விலகுவது என்பது நடவாத ஒரு செயலாகும். என்னே எங்கள் பாக்கியம்.

“ஆத்திசூடியமர்ந்த தேவனை ஏத்தியேத்தித் தொழுவோமியாமே!”
என்றும்
“கொன்றைவேந்தன் செல்வனடியிணை என்று மேத்தித் தொழுவோ
மியாமே!” என்றும்
“உலகநீதி புராணத்தை யுரைக்கவே கலைகளாய் வருங் கரிமுகன்
காப்பு என்றும் பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரவணற் புதமலர் தலைக் கணிவோமே!” என்றும் வணங்கி

விக்கின விநாயகனுடைய பாதார விந்தங்களை மனதில் பதித்து அவர் வீற்றிருக்கும் அரண்மனையையும் ஊர்ந்து பவனிவரும் ஊர்தியையும் உயிர் ஊட்டி, எம் வாழ்வைச் சிறக்கச் செய்வோமாக!

ஆலய தேர் வெள்ளோட்ட மலர் 1965

கொல்லங்கலட்டி முதலியார் மடத்தின்
அழிந்த நிலையில் இன்றைய தோற்றம்



எமது பெருமைக்குரியவர்



அமரர்.வ.சரவணமுத்து J.P ஐயா

# எழுச்சிமிகு எமது கிராமத்தின் ஒரு மீள் நோக்கு

திருமதி.அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்.

கொல்லங்கலட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள பழம்பெரும் கிராமங்களில் ஒன்றாகும். இவ் ஊரிலே ஆதியில் குடியேறியவர்கள். இந்தியாவில் உள்ள கொல்லம் என்ற நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் சைவர்களாக வளர்ந்து கோவில்கள் கட்டியெழுப்பி வழிபாடு செய்து வந்தார்கள். இதனாலேயே எம் ஊர் கொல்லங்கலட்டி எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது என்பது வரலாற்று உண்மையாகும்.

கொல்லங்கலட்டிக் கிராமம் கீரிமலைச் சிவன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகிய வரலாற்றுப் பெருமை மிக்க தலங்களையும், மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகிய புகழ்பூத்த கல்வி நிறுவனங்களையும் எல்லைகளாகக் கொண்டு விளங்குகின்றது. இக்கிராமத்தின் மத்தியில் சோழ இளவரசி மாருதப்புவீகவல்லியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட வீரகத்தி விநாயகர் மற்றும் சடச்சப்பை வைரவர், கிளானை வைரவர் ஆகிய தெய்வங்கள் இன்றும் ஆலயங்களில் அருளாட்சி புரிகின்றான.

கொல்லங்கலட்டி வீரகத்திவிநாயகர் ஆலயமானது அதன் கிழக்குப் பக்கத்தில் சைவத் தமிழ் வித்தியாசாலையையும் மேற்குப் பக்கத்தில் கேணியையும் பெருந்தெருவையும் வடக்கில் சங்கரப்பிள்ளை மடம், பூங்கொல்லை என்பவற்றையும் சூழலாகக் கொண்டு அழகுற அமைந்துள்ளது.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் அரச உதவியுடன் ஆங்கிலக்

கல்விமுறை புகுத்தப்பட்டது. வடக்கில் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்கள் மதமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டனர். இச்சூழ்நிலை தமிழினத்தின் தனித்துவத்தை அழித்துவிடும் என உணர்ந்த நாவலர் சைவமும் தமிழும் வளர்க்க பல பாடசாலைகளை நிறுவினார். அவரின் பணியைத் தொடர்ந்த அமரர் ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் தமது ஊரான கொல்லங்கலட்டியில் ஓர் பள்ளியை நிறுவ வேண்டும் என எண்ணினார். இதற்கான சூழலைத் தேடி கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் கிழக்குப் பக்கத்தில் 1869 ஆம் ஆண்டு ஓர் பாடசாலையை நிறுவினார். ஆரம்பத்தில் இப்பாடசாலை சிறிய கொட்டிலாக அமைக்கப்பட்டது. இங்கு 3 ஆசிரியர்களுடன் 40 பிள்ளைகள் கல்வி கற்றனர். இப்பாடசாலையில் தமிழ்மொழி, வடமொழி, கணிதம், சமயம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. இரவில் வளர்ந்தோருக்கான புராணபடிப்பு நடத்தப்பட்டு வந்தது. இப்பாடசாலை தெல்லிப்பழைக் கோவிற்பற்றில் ஆரம்பிக்கப்பட்ட முதற்பாடசாலை என்பது கிராமத்தின் பெருமைக்குரியதாகும். இவ்வித்தியாலயத்தை நிறுவியவரின் மகனான அமரர் சிற்றம்பலம் ஆசிரியர் அவர்கள் முகாமையாளராக பொறுப்பேற்று கொட்டிலாக இருந்த பாடசாலையை பெரிய மண்டபமாக அமைத்தார். இவர் காலத்தில் 300 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் கொண்ட பாடசாலையாக வளர்ச்சி பெற்றது. இங்கு கல்விகற்ற மாணவர்கள் பலர் உயர் பதவிகளிலிருந்து எம் மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவ்வித்தியாலயத்திற்கும் வீரகத்தி விநாயகருக்கும் உள்ள உறவு மிக நெருக்கமானது. நவராத்திரி காலங்களில் இவ் உறவின் உணர்வை புரிந்து கொள்ள முடியும் இக் காலத்தில் வித்தியாசாலை நூலகத்திலிருந்து கோவிலுக்கு ஏடு, நூல்கள் என்பன எடுத்துச் செல்லப்பட்டு பூசையில் வைக்கப்படும். நவராத்திரி தினங்களில் மாணவர்களால் கோவிலில் சரஸ்வதி தோத்திரம் படிக்கப்படும். இறுதி நாளான விஜயதசமி விழா வித்தியாசாலை முகாமையாளரரின் உபயமாக நடைபெறும். இன்றும் இவ் உபயம் முகாமையாளரின் பூட்டப்பிள்ளைகளால் நடத்தப்பட்டு வருகிறது. விஜயதசமி அன்று

பன்னீர் வாழை வெட்டப்பட்டு விநாயகர் வாசலில் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு ஏடு தொடக்கப்படும். பின்னர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எல்லோரும் மேளவாத்தியத்துடன், வித்தியாசாலையை வந்தடைவார்கள். பின் அங்கு முதல் நாள் பள்ளிப்படிப்பு தேவாரபாராயணத்துடன் ஆரம்பித்து சொல்லிக் கொடுக்கப்படும். இந்நிகழ்வில் பிரசாதம் வழங்கப்படுவது வழக்கமாக இருந்தது. இந்நிகழ்வானது விநாயகர் ஆலயத்திற்கும் இவ் வித்தியாலயத்திற்கும் இடையே உள்ள வரலாற்றுப் பதிவை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இவ் வித்தியாலயம் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச்சூழலால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கி வந்தது. 2011 ஆம் ஆண்டு இப் பகுதியில் மீள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக அழிவடைந்து கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டு மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டிருப்பது வீரகத்தி விநாயகரின் அருட்செயல் என்று கூறினால் அது மிகையாகாது.

வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மேற்குப் பக்கத்தில் கேணி அமைந்துள்ளது. இக் கேணி எப்பொழுது எவரால் தோண்டப்பட்டது என எவருக்கும் தெரியாத நிலையில் உள்ளது. இக்கேணி ஆரம்பத்தில் ஆடு மாடு தண்ணீர் குடிப்பதற்கு தோண்டப்பட்டதாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

இக் கேணிக்கு அருகாமையில் இருந்த ஆலமரத்தடியில் சோழநாட்டு இளவரசி மாருதப்புரவீகவல்லி வரம் வேண்டி விநாயகரை வைத்து வழிபட்டு வந்தார் என்றும் அதனால் இக்கேணி புனித இடமாக கொள்ளப்படுகிறது என கூறப்படுகிறது.

கேணிக்கு முன்பாக விலங்கினங்கள் தாகம் போக்கும் தண்ணீர்த் தொட்டியும் அவை உரோஞ்சும் கல்லும் சுமை தாங்கியும் இருந்தமை இக்கிராமத்தின் சங்ககால நாகரீகத்தின் உச்சத்தன்மையை வெளிப்

படுத்துகின்றது. ஆயினும் இவை இன்று அழிவுற்றிருப்பது மிகவும் தேவனைக்குரியதாகும். பிற் காலத்தில் இக் கேணி ஊர் மக்களின் முயற்சியால் திருத்தப்பட்டு மகோற்சவ தினத்திற்கு தீர்த்தம் எடுக்கும் கேணியாக அமைந்துள்ளது. இக் கேணியின் பக்கத்திலே விநாயகர் வீற்றிருப்பதால் சோமசுந்தரப்புலவர் தமது கவிதையில் வீரகத்தி விநாயகரை கேணிக் கரைப்பிள்ளையார் என குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

இங்குள்ள கேணிக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் இடையே அம்பனையிலிருந்து தச்சங்காடு வரை செல்லும் பெருந்தெரு காணப்படுகின்றது. இத் தெரு வ.குமாரசாமி அவர்களால் தெல்லிப்பழைக் கிராம சங்கத்தலைவராக இருந்த காலத்தில் போடப்பட்டு இன்று இத்தெரு அகன்று பேருந்து செல்லும் தெருவாக வளர்ச்சி பெற்றுள்ளது.

கோவிலின் வடக்குப் பக்கத்தில் சங்கரப்பிள்ளை மடம் அமைந்துள்ளது. இம்மடம் ஒரு அறையும் விறாந்தையும் கிணற்றையும் கொண்டுள்ளது. சங்கரப்பிள்ளை என்பவரால் இம் மடம் கட்டப் பட்டபடியால் சங்கரப்பிள்ளை மடம் என அழைக்கப்பட்டு வருகிறது. இங்கு கோவில் திருவிழாக் காலங்களில் தண்ணீர்ப் பந்தல் போன்ற நீராகாரம் வழங்கப்பட்டது. பிள்ளையார் வீதிவலம் வரும் போது நிறைகுடம் வைக்கப்பட்டு அர்ச்சனை செய்யப்படும். தேர்த்திருவிழா அன்று பிரசாதம் வழங்கப்படுவது வழக்கமாக இருந்தது.

இம்மடத்தில் பாராளுமன்ற உறுப்பினரான அமரர் வன்னிய சிங்கத்தின் தந்தை அமரர் வ.குமாரசாமி அவர்களால் 1933ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சனசமூக நிலையம் இயங்கி வந்தது. இதுவே எமது கிராமத்தில் இயங்கிய முதலாவது சனசமூக நிலையமாகும். அன்றுள்ள முதியவர்களுக்கு இந்நிலையம் புதினப் பத்திரிகை வாசிப்பதற்கு உதவி புரிந்தது. அத்துடன் வழிப்போக்கர் தங்குவதற்கும் வசதியாக இருந்தது. கொல்லங்கலட்டியில் ஓர் நூல் நிலையத்தை ஆரம்பித்து வைத்த

பெருமை வழக்கறிஞர் வ.குமாரசாமிக்கே உண்டு. அவர் தொடங்கிய நற்பணியை 1950 ஆம் ஆண்டு முன்னெடுத்த பெருமைக்குரியவர் சட்டத்தரணி ஜீவேஸ்வராவாகும்.

விநாயகர் ஆலயத்திற்கு மிகவும் அண்மையாக பிள்ளையார் பக்தராக முதலியாப்பிள்ளை என அழைக்கப்படும். சங்கரப்பிள்ளை விசுவநாதர் அவர்கள் கொல்லங்கலட்டியில் ஓர் மடத்தை நிறுவி அதற்கு துவாரகோஷம் என பெயரிட்டு ஆன்மீக தர்மம் செய்து வந்தார். அம்மடம் இன்று முதலியாப்பிள்ளையார் மடம் என அழைக்கப்படுகின்றது. அதனை சுருக்கமாக மடத்தடி என்றும் அழைப்பர்.

முதலியாப்பிள்ளை அவர்களின் தந்தை சங்கரப்பிள்ளை மாவை முருகனுக்கு கொடிமரம் எழுப்பி விழா எடுத்தார். இக்கொடிமரத்திற்கு கொடிச்சீலை கொல்லங்கலட்டி மடத்தில் இருந்து மேளதாளத்துடன் எடுத்துச் செல்லப்படும் வழமையை ஏற்படுத்தி ஊருக்கு பெருமை சேர்த்தார். இவருக்குப் பின் இப் பணியை J.P.வைத்திலிங்கம் சரவணமுத்து ஐயாவும் செல்லப்பா ராசாவும் செய்து வந்தனர். இன்று இம் மடம் சேதமடைந்து இடிபாடுகளுடன் இருந்தாலும் அம் மடத்தின் பகுதிகளாக இருந்த காணியில் அபிவிருத்திச் சங்கம் சனசமூகநிலையம் பவளம் கடைத் தொகுதியும் கிணறும் இருப்பது முதலியாப்பிள்ளையின் தர்மத்தை நிலை நிறுத்தி நிற்கின்றது.

முதலியாப்பிள்ளை அவர்கள் எமது கிராமத்தில் சமயச்சடங்குகள் முறைப்படி நடைபெற வழி செய்தார். இதற்காக சைவக் குருமார்களை வேதாரணியத்திலிருந்து வரவழைத்து தனது மடத்தில் அமர்த்தி நீத்தார். கடமைகளை சைவ முறைப்படி ஒழுங்குற நடத்த ஆவன செய்தார். இவ்வகையில் கடைசியாக இங்கிருந்த குருக்கள்மார்களில் சங்கர ஐயரும் மறைக்காடரும் நினைவுக்குரியவர்கள் ஆவர்.

இம்மடத்தில் மாலை வேளைகளில் பண்ணிசை ஒலித்துக் கொண்டே இருக்கும் இங்கு நாயன்மார்களின் குருபூசைகள் ஒழுங்காக

நடைபெறும் இவ் வேளைகளில் கூட்டுப் பிரார்த்தனை பெரியோர்களின் சமய சொற்பொழிவுகள் நடைபெற்று பிரசாதமும் வழங்கும் வழக்கம் உண்டு.

மடத்தைச் சுற்றி அமைந்திருந்த பூங்கொல்லையும் நிழல்வாடி மரங்களும் என்றும் மறக்க முடியாதவை. இவ்வகையான தர்ம சொத்துக்களைப் பாதுகாப்பது எம் இளைய தலைமுறையின் கடமையாகும்.

எமது கிராமத்தில் குமாரசாமி வன்னியசிங்கம், சின்னத்தம்பி சிவமகாராசா, வ.சிவதாசன் நடராசா ரவிராஜ் போன்ற பெருமக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக விளங்கி அரசியலில சேவையாற்றி எமக்கு பெருமை சேர்த்துள்ளனர். எம் கிராமத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நற்பணிகளை செய்த வைத்திலிங்கம் சரவணமுத்து ஐயா என் நினைவில் பெருமதிப்பிற்குரியவர். அவருடைய சேவையால் எம் கிராமம் வளர்ச்சி பெற்றது. வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தேர்த்திருப்பணிச் சபையை உருவாக்கி தேரோட வழிசெய்த பெருமை இவருக்கு உண்டு. இவ் ஆலயத்தில் அருள் நெறிக்கழகத்தை அமைத்து சமயத்தையும் பண்ணிசையையும் வளர்த்தார். மாவைக் கிராம அபிவிருத்திச் சங்கததின் முதலாவது தலைவராக விளங்கி கிராம அபிவிருத்திக்காக அயராது உழைத்தார். முதலியாப்பிள்ளை மடத்தை அவர் மறைவிற்குப் பின்னர் பராமரித்து வந்துள்ளார். தமிழரசுக் கட்சியின் மாவிட்டபுரம் மூலக் கிளையின் தலைவராக இருந்து அரசியல் பணிபுரிந்து மக்களின் மதிப்பைப் பெற்ற பன்முக சேவையாளனாக விளங்கினார். தெல்லிப்பழைக் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவராக இருந்தார். அங்கு அவரது முயற்சியால் "மலேசியா வாட்" கட்டப்பட்டு மக்கள் தேவைகளை நிறைவு செய்தமை பெருமைக்குரிய விடயமாகும். இவர் பணியைத் தொடர்ந்து தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்க தலைவர் சின்னத்தம்பி சிவமகாராசா இவ்வைத்தியசாலையின் தலைமை பொறுப்பை ஏற்று சிறப்புற பணிபுரிந்தார். ஆயினும் காலச் சூழ்நிலையால் கூட்டுறவு வைத்தியசாலை இன்று தனது பணியை

# எமது மண்ணை வளம்படுத்தியவர்களும் பெருமைப் படுத்தியவர்களும்



நல்லாசான் திரு ஆ வேலுப்பிள்ளை
பாடசாலையை ஸ்தாபித்தவர்




ஆசிரியர் திரு வே சிறிறம்பலம்
பாடசாலை முகாமையாளர்



திரு கு வன்னியசிங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



திரு சி சிவமகாராசா
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



திரு க சிவதாசன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்



திரு ந ரவிராஜ்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

செம்மையாக மக்களுக்கு வழங்க முடியாமல் இருப்பது வருத்தத்திற்கு உரியது.

எமது கிராமம் தனித்துவமான சிவப்பு நிற மண் கொண்டது. மழைத்துளி விழும் போது ஏற்படும் மண்வாசனையை நுகர்வோரால் தான் உணர்ந்து கொள்ள முடியும். வெற்றிலையும் தென்னை மரங்களும் வாழையும் செம்மையாக வளரும். இவ் அழகிய கிராமத்தில் சூத்திரக்கிணற்றடியும் பட்டை கொடியும் நீர்ப்பாய்ச்சலுக்கு உதவிய சாதனங்களாகும். வீட்டுக்கு வீடு வளர்க்கப்பட்ட ஆடுகளும், மாடுகளும் கிராமச் சூழலை மெருகூட்டின. அங்கு, இங்கு செல்லாது தனிக்கலாச்சாரத்துடனும் வளமுடனும் பொலிவுடனும் வாழ்ந்த எம் மக்களின் வாழ்வு 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச்சூழலால் சிதைவுற்றது. கொல்லங்கலட்டி கிராமம் இப்பில் காடாகி இராணுவ குடியேற்றமாக மாறியது. கோவில்கள் சிதைந்தன. பாடசாலைகள் அழிந்தன. வீடுகள் மண்மேடாக காட்சி அளித்தது. இந்நிலை 2011 ஆம் ஆண்டு மக்கள் முயற்சியால் மீள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. இம் மீள் குடியேற்றத்தில் முதல் காலடி எடுத்து வைத்த பெருமைக்குரியவர் எம் வீரகத்தி விநாயகர் ஆலய குரு அமரர் ஸ்ரீ.சிவசண்முகநாதக் குருக்களையே சாரும். வீரகத்தி விநாயகர் ஆலயம் கொல்லங்கட்டி பெருமக்கள் உதவியால் மீண்டும் பொலிவுற்று மக்கள் வாழும் பிரதேசமாக மாறிவருவது மகிழ்ச்சிதரும் விடயமாகும்.

# "எழில்மிகு திருவூர் எம்மூர் ஆகும்"

சு.குகதேவன்
கொல்லங்கலட்டி

சீர்பூத்த செந்தமிழும் சைவமும் கலந்து எழில் தரும் நல்லூர் எம்மூர் ஆகும். இது பழமை மறவாப் பண்புடையார் வாழ்பதி ஆதலினால் இந்தியாவில் இருந்து வந்த காலத்தில் தாம் அங்கு வாழ்ந்த நிலம் கொல்லம் ஆகும். ஆதலினால் அக்கொல்லம் என்ற பெயரோடு கற்கள் நிறைந்த நிலம் கலட்டி எனப்படும் ஆதலில் அக்கொல்லம் என்ற பெயரோடு கலட்டி என்ற பெயரும் இணைய வந்ததே கொல்லங்கலட்டி என மாவை சின்னக்குட்டிப் புலவர் எழுதிய தண்டிகை கனகராஜன் பள்ளு என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பர்.

மேலும் இந்நிலத்தில் சிறப்பை எடுத்து நோக்கும் போது வளமான செம்மண் வளத்தையும் உவர்த்தன்மையுடைய நீரையும் உடைய காரணத்தினால் நாற்றிசையும் வெற்றிலைக் கொடிகள் நிறைந்து வளம் செய்வதைக் காணலாம். இது போலவே "நெல்லுக்கிறைத்த நீர் வாய்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்ற வழி ஓடும் நீரின் பயன்கருதியும் வெற்றிலைக் கொடிகளுக்கு நிழல் வேண்டியும் நான்கு கரைகளிலும் பயன்தர வல்ல கழுகு தென்னஞ் சோலைகளும் மாபலா வாழை முதலாம் பயன்தரு மரங்களும் நிறைந்து காணப்படும் திருவூர் ஆகும்.

மேலும் இத்தகு எழிலூருக்கு மேலும் எழில் தருவன ஆலயமும் வித்தியாலயமும் என்பர். அவ்வகையில் கி.பி.8 ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவினின்றும் இலங்கை வந்தவர் மாருதப்புரவீகவல்லி என வரலாறு கூறுகின்றது. இவள் தனது பரிவாரங்களுடன் பாடிவீடு அமைத்து இருந்த இடம் குமாரத்தி பள்ளம் என்பர். இவவிதம் குன்ம பிணியும் குதிரை முகமும் கொண்ட இம் மங்கை இப்பிணிதீர ஏதுவழி?

என இறையருளை வேண்டித் துதித்ததன் பயனாக புண்ணி நீர்களாடியில் புன்படு நிலைகள் நீங்கும் என்றவழி சாந்தலிங்க முனிவரின் ஆலோசனைக்கமைய ஈழத்தின் பெருமை மிகு கண்டகியாம் தீர்த்தத்தில் நீராட விழைந்தார். அதனாலேயே தனது பாடிவீட்டில் இருந்து கண்டகி தீர்த்தக் கரைக்குச் சொல்வோர் சுரங்கப் பாதையை அமைப்பித்தார் என்பர். அவ்வாறு அவர் அமைத்த சுரங்க வழியே இன்று வௌவாற்பிரை என்று அழைக்கப்படும் சுரங்கவழி என்பர்.

இவ்விதம் நீராடி வரும் காலத்தில் மாவைப் பெருமான் இன்று எழுந்தருளியுள்ள இடத்தில் அன்று இருந்த வேலை வணங்கிட நோயகன்று இனிய முகமும் பெற்றார் என்பர். அதனாலேயே இவ்விடம் மாவிட்டபுரம் என்னும் காரணப் பெயரை பெற்றது என்பர். அதன் காரணமாகவே அம்மங்கை அவ்விடத்தில் எம்பிரானுக்கோர் ஆலயத்தை எடுத்தார் என்பர்.

ஆகவே அவ்வாலயத்தில் மூல மூர்த்தியாக நிறுவும் பொருட்டு அழகன் முருகனின் சிலையை வள்ளி தேவசேனா சமேதராக எடுத்து வந்தாரென்றும் அதுவே கங்கையில் கண்டகியில் தவழ்ந்து வந்துள்ளமையால் காங்கேயன் என்றும் பெயர்பெற்றது என்பர்.

ஆனால் முருகனைப் பணிந்த நங்கை தனது பார்வைக்கு அந்நோயின் வடுக்கள் சில முகத்தில் இருப்பதாகத் தோன்றவும் இது ஏன்? இவை தீர யாது வழி? என்றும் சிந்தித்தாரென்பர். அதனால் முருகனிடமே வள்ளியை ஓட்டவிடாது ஆடல் செய்த ஐங்கரனை வணங்காத குறையே இதுவென உணர்ந்த மாருதப்புரவீகவல்லி அக்குறை தீர கலட்டி முதலாக ஏழு இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபட்டாரென்பர். ஆகவே அவ்விதம் முதன் முதலாக வைத்து வழிபட்டதும் உடுக்குப் பீடத்துடன் கூடியதுமான அச்சிலையை மூலமூர்த்தியாகக் கொண்டு விளங்குவதே எங்கள் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் ஆகும்.

அதிலும் கி.பி.8ஆம் நூற்றாண்டு மாருதப்புரவீகவல்லியினால் கேணிக்கு மேற்காக வைக்கப்பட்ட அவ்விக்கிரகம் 1872 ஆம் ஆண்டு பொன்னையாக் குருக்களின் தந்தையார் அம்பலவாணக் குருக்கள் அவர்களினால் எடுக்கப்பட்டடு தனது உரிமையானதும் தற்போது உள்ளதுமான காணியில் வைத்து ஓர் சிற்றாலயத்தை எழுப்பினார் என்பர். அதுவே இன்று பலபரிவார தெய்வங்களையும் வசந்த மண்டபத்தையும் கொண்ட எழிலாலயமாக விளங்குவதும் கண்கூடு.

அது மட்டுமன்றி இன்றுபல கும்பாபிஷேகங்களையும் கண்டு தேர்த்திருப்பணியையும் கண்டு உயர்ந்த இவ்வாலயத்தில் இன்று அருளாட்சி புரியும் எம்பெருமான் அன்று வல்லியினால் வைக்கப்பட்டதும் உடுக்குப்பீடத்துடன் கூடிய அதே மூர்த்தி கரம்மிகு ஐங்கரனே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்னும் வைகாசிப் பௌர்ணமியை இறுதியாகக் கொண்டு 10 தினங்கள் மகோற்சவம் நிகழும் இவ்வாலயத்தின் தீர்த்தக்கேணி மிகப் புராதனமானது என்பதும்அதற்குச் சான்றாக கேணியின் அமைப்பும் அம்மண்டபத்திற்கு முன்னுள்ள ஆவுரிஞ்சிக் கல்லுமே சான்றாகும் என்பர்.

வானுயர்ந்த தென்னைமரம்
வாழைமரம் பாக்குமரம்
தானுயர்ந்து வளம் சொரியும்
கொல்லங்கலட்டி வாழியவே

# மறைந்தும் மனத்தில் மறையாதவர்கள்

ஈழத்தின் சிகரமாக விளங்கிய யாழ்ப்பாணத்தின் பொற்கலசமாக அமைந்த மாவிட்டபுரத்தின் கண்மணி போன்றது கொல்லங்கலட்டி. ஆரம்பத்தில் ஒரு சிறு குறிச்சிப் பெயராக விளங்கிய இப்பெயர் தற்பொழுது தெல்லிப்பழை தென்மேற்கு கிராமசேவகருடைய ஒரு பகுதியையும் மாவிட்டபுரம் கிராம சேவகரின் பெரும் பகுதியையும் குறிக்கும் பெயராக விளங்குகின்றது. ஒரு ஊரின் பெருமை அவ்வூரின் வரலாற்று சிறப்பு, வாழ்ந்த, வாழுகின்ற மக்களின் அறிவு, ஆற்றல், செல்வம், சாதனைகள், பண்பாடுகள் ஆகியவற்றின் மூலம் அளவிடப்படுகின்றது. ஆலயங்களிலும், மனைகளிலும் மங்களகரமானதாக எல்லோருடைய வாய்களிலும் யாழ்ப்பாணத் தமிழ்மணம்போல் சுவைதரும் மாவிட்டபுரம் வெற்றிலைக்கு நிகரேது. ஈழத்தில் தென்னகத்து ஆலய நிர்மானத்திற்கு ஒப்பாக இராஜகோபுரத்துடன் அமைந்த மாவைக் கந்தன் ஆலயத்தின் அருட் பெருமையும் வரலாற்றுப் புகழும் உலகறிந்ததே.

இவற்றிற்கு மேலாக இப்பகுதியில் வாழ்ந்து மறைந்த பெரியார்களது திறமைமிக்க பணிகளும், பண்பாடுகளும் குறிப்பி டற்கரியன. இப்பகுதியில் வாழ்ந்த சில பெரியார்களுடைய வாழ்க்கை சாதனைகளை விளக்குவதே நோக்கமாகும். இப்பெரியார்கள் தமது தொண்டுகளால் பெருமைக்குரியவர்கள். இக்கட்டுரையில் சில இட வசதியீனம் காரணமாகவும், ஆராய்ச்சிக்கு காலம்போதாமையாலும் ஒரு சிலருடைய வாழ்க்கை ஆராயப்படவில்லை. அவைகள் எதிர்காலத்தில் இப் பெரியார்களது பணியில் நிற்கும் இளைஞர்களால் நிறைவேற்றப்படுமெனக் கருத இடமுண்டு எனலாம். திரு.வ.குமாரசாமி B.A.(அப்பர் பிறக்கறாசியர்), தெல்லிப்பழை கிராமசபைத் தலைவராக கடமையாற்றிய பொழுது ஆற்றிய பணிகள் சிறந்தோங்கு கின்றது. தெல்லிப்பழையில் ஒருபக்கமாக அமைந்திருக்கும் கிராமசபை அலுவலகத்தை நடுவனாக விளங்கும் மாவிட்டபுரத்தில் திரு பொன்னம்பலம் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட காணியில் அன்றைய

மணியகாரனுடைய எதிர்ப்பையும் முறியடித்து அலுவலகத்தை நிறுவியமை அவரது துணிச்சலுக்கும் செயற்றிறனுக்கும் எடுத்துக்காட்டு. ஒரு சிறு குன்றாக இருந்த நீரூற்றை தற்போதைய நீச்சல் தடாகமாக அமைத்த பெருமை இப்பெரியாருக்குரியதாகும். இது மாத்திரம் அல்லாது ஒரு காலடிப் பாதையாக வளைந்து வளைந்து சென்ற அம்பனை தச்சங்காட்டு ஒழுங்கையை நீண்டு நிமிர்ந்த பெருந்தெருவாக அமைத்த சிறப்பு இவருக்குரியது. வலிகாமம் வடக்கு கிழக்கு மக்கள் சார்பில் டொனமூர் ஆனைக்குழுவினரை தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பாக பேட்டிகண்ட குழுவின் தலைவராக எடுத்துரைத்த கருத்துக்கள் ஆணைக்குழுவினரால் பாராட்டப்பட்டமை அவருக்கிருந்த அரசியல் விவேகத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஆரியபாஷா விருத்திச் சங்க உபதலைவராக கடமையாற்றிய இவர் கதிரைமலைப்பள்ளு, தண்டிகைக் கனகராயன்பள்ளு, கையிலாயமலை போன்ற நூல்களை விளக்கவுரைகளுடன் அச்சிடுவித்து ஈழத்தமிழ் வரலாற்றை அழியாமல் பாதுகாத்தார்கள். பழந்தமிழ் வரலாற்றில் இவருக்கிருந்த நுண்ணிய அறிவையும் ஆற்றலையும் 1930ம் ஆண்டில் இந்துசாதனபத்திரிகையில் வெளியான இவரது கட்டுரை "இலங்கையில் டச்சுக்காரரின் சாசனங்களில் ஒரு கண்ணோட்டம்" (A Peep into Dutch Arcnives in Ceylon – Hindu or – gen 1930) மூலம் அறிய முடிகின்றது. தமது பகுதியில் மக்களுடைய பொது அறிவை வளர்ப்பதற்கு 1931ம் ஆண்டு திரு.வ.தம்பு அவர்களைச் செயலாளராகவும் திரு.அ.சங்கரப்பிள்ளை அவர்களைச் பொருளாளராகவும் கொல்லங்கலட்டி வாசிகசாலையைப், பின்னவருடைய குடும்பத்தினரின் மடத்தில் அமைத்து சமூகத்தினருக்கு பெரும் பணியாற்றினார்.

திரு.ந.சங்கரப்பிள்ளை (சங்கரப்பிள்ளை உபாத்தியாயர்) மாகா ஜனக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராக கடமையாற்றிய இப்பெரியார் அறிவுக்களஞ்சியம் எனலாம். இவரை "நடமாடும் அகராதி" (Walking Dictionary) என அக்கால அறிஞர்கள் அழைத்தனர். தமது பகுதி இளைஞரை சமூகப் பணியில் இயக்க ரீதியாக உழைப்பதற்கு வழிகாட்டியவர். இப்பகுதி மாணவர் மன்றம்,

இளைஞர் மன்றம் போன்றவற்றிற்கு தலைவராக இருந்த இளஞ் சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கும் சமூகப் பணிக்கும் ஆற்றுப்படுத்திய பெருமை இவருக்கே உண்டு எனலாம். கொல்லங்கலட்டி சன சமூக நிலையத்தின் தலைவராக இருந்த காலகட்டத்தில் கருத்து அரங்குகள் அமைத்து வேறுபட்ட அரசியல் சித்தாந்தங்களை இலக்கிய விஞ்ஞான விமர்சனங்கள் மூலம் பரந்த அறிவை இளைஞருக்கு ஊட்டினார்கள். இவர்களால் பயிற்றப்பட்ட மாணவர்கள் பலர் பல முன்னணியில் நிற்பதை நாம் காண முடியும். அமரர்.கு.வன்னியசிங்கம், அமரர் பொன்.கந்தையா போன்ற அரசியல் மேதைகள், ஜனாப் A.M.A.அசீஸ், தெ.து.ஜெயரத்தினம் போன்ற கல்விமான்கள் பலர் இவரது மாணாக்கர் என்பது குறிப்பிடற்குரியது. கலாநிதி கணேசலிங்கம், பொறியியலாளர் விஸ்வநாதன் இக்கட்டுரை ஆசிரியர் போன்ற பல இப்பகுதி இளைஞர்களும் இவர்களால் பயிற்றப்பட்டவர்கள் என்பதும் கவனத்திற்குரியது. கொல்லங்கலட்டி விநாயகர் ஐக்கிய பண்டகசாலையின் பொருளாளராக கடமையாற்றிய இவரது கண்ணியத்தால் பண்டகசாலை சிறந்த சேவையாற்றியது எனலாம். இவரால் சமூகப்பணிக்கு பயிற்றப்பட்ட இளைஞர்களே அருள்நெறிக்கழகம் ஆரம்பித்து சமயப்பணியிலும் ஈடுபடுவதை நாம் காண்கின்றோம்.

அமரர்.கு.வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படவில்லை. அவரது வாழ்க்கையும் பணிகளும் விரிவாக ஆராயப்பட வேண்டியமையால் பிறிது சந்தர்ப்பத்தில் ஆராயப்படும்.

1972ம் ஆண்டு கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலையை நிறுவிய திரு.ஆ.வேலுப்பிள்ளை, கல்விப்பணியோடு சமயப்பணியும் புரிந்த அவர் மகன் ஆசிரியர் சிற்றம்பலம் ஆரம்பத்தில் பாடசாலை நடாத்திப் பின் விதானையாரான இராசநாயகம், ஆசிரியர் கா.இளையதம்பி உபாத்தியாயர்) இராசாசாமியார் என அழைக்கப்பட்ட சி.இராசாதம்பு உடையார் என அழைக்கப்பட்ட தர்மாவரதர், குலவீரசிங்கசாமியார் போன்ற பல பெரியார்கள் ஆற்றிய பணிகளும்

குறிப்பிடற்குரியவை. இந்தியா, மோறேஷியஸ், மலேஷியா போன்ற வெளிநாடுகளில் பணியாற்றி நமது கிராமத்திற்கு பெருமையீட்டிய T.K.கனகசபாபதிப்பிள்ளை, சின்னத்தம்பி உடையார் சுப்பிரமணியம் (மார்க்கண்டர் என அழைக்கப்பட்டவர்) இராமநாதர் வயித்திலிங்கம் போன்ற பெரியார்களும் குறிப்பிடற்குரியவர்கள்.

மறைந்த பெரியார்கள் போன்று தன்னலமற்ற பணிகளைப் புரிந்து பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் பெருமை பெற சமூகத்திற்கும் தமிழுக்கும் பணியாற்றுவதே நமது கடமையாகும். வேறுபட்ட கருத்துடையவரானாலும் முக்கிய பொதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாற்றாருக்கு இடமளியாது தாமே இணைந்து செயற்பட்ட அப்பர் பிறக்கிறாசியர் சேர்மன் சங்கரப்பிள்ளை, முதலியாப்பிள்ளை போன்று ஒன்று திரண்டு சைவத்தையும் தமிழையும் சமூகத்தையும் காப்பதே நாம் மறைந்தும் மனதில் மறையாத இப்பெரியார்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

வாழ்க பெரியார்கள் - வளர்க அவர்தம் தொண்டுகள்

நன்றி - கிராம அபிவிருத்திச் சங்க கைத்தொழில் மண்டப திறப்பு விழா மலர்

# மாவை முதலியார்

**வெண்பா**

சைவக் குருக்கள்மார் தங்குமடம் தானெங்கே
மைவருகண் டன்வாழ் மயானந்தான் - கைவருமோ
வள்ளல் மகான்விசுவ நாத முதலியாப்
பிள்ளை பிறந்திலரேல் பேசு!

அறநெறி அருகி மறநெறி மல்கும் போதும் புன்னெறியைப் போக்கி நன்னெறியை அதன் வழி ஒழுகி நடந்து காட்ட நல்ல அவதார புருடர் தோன்றுவர் என்பர் அறிஞர்.

அன்னிய அரசு ஆதிக்கம் செலுத்திய காலம் அந்தக் காலம் அதனால் அவர்தம் மதம் மொழிகளில் அனைவருக்கும் ஆசை உண்டாயிற்று அவர்களே அதிகார பீடங்களிலும் அமர்ந்தார்கள். அதனால் அவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் ஒல்லும் வகையால் இடர்வினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செய்தார்கள்.

1875 ஆம் ஆண்டு மாவைக் கொல்லங்கலட்டியில் ஸ்ரீமாந் முதலியார் அவர்கள் அவதரித்தார். இவர் தாய் பெயர் திருமதி தெய்வானைப்பிள்ளை தந்தை பெயர் கொடிமரச்சங்கரர் என விதந்து பேசப்படும் திரு.சங்கரப்பிள்ளையின் பெயரனின் பெயரினால் என்பது தொடர்ந்து வரும் மரபுவழிப் பெயருடையவர் என்பதே.

இவருக்குத் தாய் தந்தை தரித்த பெயர் விசுவநாதர். விசுவநாத முதலி வழி வந்தார். ஆகலின் விசுவநாத முதலியார் ஆனார். பின் நாவலர் என்னும் காரண இடுகுறிப் பெயர் ஸ்ரீலஸ்ரீ நல்லை நாவலரையே குறிப்பது போல முதலியார் என்னும் காரண இடுகுறிப் பெயர் மாவை முதலியாரையே குறிக்கும். முதன்மை பெற்றுவிட்டது.

முதலி என்பது தொண்டை மண்டல வேளாளருக்கு தொண் டைமான் சக்கரவர்த்தி கொடுத்த பட்டம்.

இவர் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலையில் நடந்த காவிய வகுப்பிலே கல்வி பயின்றார். ஆங்கிலவாணி ஆட்சி புரிந்த காலம் அக்காலம். ஆங்கிலம் படிக்க அருகதை அற்றவர்

பலர் அங்கு பயின்றனர். ஆனால் முதலியார் அவர்களுக்கோ ஆங்கிலம் படிக்க ஆஸ்தியும் இருந்தது. ஆயின் "என்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்னும் மந்திரம் தமிழையே படிக்கச் செய்தது.

அப்போது தலைமைப் பேராசிரியராகப் புலவர் சிகாமணியாகிய சுன்னாகம் ஸ்ரீமத்அ.குமாரசாமிப்புலவர் அவர்கள் கொலு வீற்றிருந் தார்கள். அவர்களிடம் பாடங் கேட்கும் பாக்கியம் பெற்றார். கற்றதனால் ஆய பயன், வாலறிவன் நற்றாள் தொழலே என்பதைக் கண்டார்.

கருவி நூல்களைக் கருத்தறிந்து எழுத்துப்பிழையறக் கற்றார். கற்று கற்றாங்கு ஒழுகினார். அதனால்

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறன் முட்டறுப்பான் ஆகும் - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல் நூற் பொருள் உணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்றவாறு வீட்டு நெறிக்கு ஆற்றுப் படுத்தப்பட்டார்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை அறிந்து முத்தி இன்பம் பெறும் பொருட்டே" என்பது நாவலர் 2ம் பாலபாடத்துள்ள முதல் வாக்கியம்.

இதனைக் கற்ற முதலியார் அவர்களுக்கு இவ்வசனம் மனித இலட்சியமாகிய மோட்ச ஆசையை முதிர்வித்தது.

நான்காம் பாலபாடதத்தில் உள்ள மடம் என்ற பாடமும் முதலியாருடைய மனத்தை மிகமிக வசீகரித்து. அதனால் மக்களின் மடம் நீங்க மடம் அமைத்தார். அதற்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் துவஜாரோகண மடம் எனப் பெயர் வைத்தார்.

அதற்கு மடாதிபதியாக கருவி நூல்களையும், வேதாக மங்களையும் கற்றறிந்தவரும், திருமுறைப் பயிற்சியிற் சிறந்தவரும், சீவகருணை பக்தி வைராக்கியம் ஞானம் என்னும் நான்கும் உடையவரும் ஆகிய வேதாரணியம் ஸ்ரீமத் அடங்கன் முறைத் தேவாரக் கணபதிக் குருக்கள் ஐயா அவர்களின் அருந்தவப் புதல்வரான

ஸ்ரீமத் செல்லையாக் குருக்கள் அவர்களையும் உபமடாதிபதியாக அவர்தம் அன்புக்குரிய மருகர் சிவத்திரு சங்கரக் குருக்களையா அவர்களையும் நியமித்தார்.

நியமித்து சிவ பூசை செபம் தியானம் முதலியவற்றைத் தினந்தோறும் நடைபெறச் செய்தார். அருட்செல்வருட் செல்வராய ஆளுடைப்பிள்ளையார் ஆதியாய நால்வர் பெருமக்களின் குருபூசைத் தினங்களையும் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் குருபூசைத் தினத்தையும் கொண்டாடச் செய்தார். தீட்சைகள் நடைபெறச் செய்தார். திருமுறைப்பாராயணமும் செவ்வனே நடைபெறச் செய்தார்.

இன்னும் இவை கிரமமாக நடைபெறுதல் அனைத்தறம் ஆகிய மனமாசு நீங்கிய மனிதர், மாவைக் கொல்லங்கலட்டி முதலியாரே என்பதை மாவை மட்டும் அல்ல மாநிலம் முழுவதும் அறிந்து கொண்டே இருக்கிறது.

இம்மடத்தில் இருந்தே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குக் கொடிச்சீலையைக் கொண்டு போகவுஞ்செய்தார்.

நாவலர் நான்காம் பாலபாடத்தில் நவின்றவாறு மக்கள் மடம் நீங்க மடம் படைத்தார். சிவன் திருநடனஞ் செய்யும் திருவம்பலமாகிய செம்பொன் வாய்க்கால் இடுகாடு அன்று போல் இன்றும் இருக்கக் காத்தார்.

மடஞ்சார்ந்த மக்களின் பல இருளாகிய அஞ்ஞான இருளை மடாதிபதிகள் மூலம் அழித்தார். எனவே முத்தொழிலைச் செய்யும் மூர்த்தி போன்ற அவதாரபுருஷர் முதலியார் என்றெல்லாம் அவர்கள் திருத்தொண்டுகளை எழுதிக் கொண்டே போகலாம். முடியுமா?

அவர்களுடைய திருவுருவம் மக்கள் மனதில் அன்று போல் என்றும் அமர்ந்திருக்கும்.

நன்றி

கிராம அபிவிருத்திச் சங்க கைத்தொழில் மண்டப திறப்புவிழ மலர்

# கொல்லங்கலட்டி

பவை ஜெயபாலன்

தெல்லிப்பளை என்னும் பேரூரின் தென்மேற்கு
திசையில் தெரியும் செம் மண்ணோடு
கொல்லங்கலட்டியின் எண்ணம் எழுந்ததும்
கூடுது பல நினைவு என்னோடு

அம்பனை பர்ரானாலை விராங்கொடை கிளானை
அந்தவை தச்சங் காடுவரை
கந்தனின் மாவை கீரிமலை மேற்கில்
கயிந்தப்பை எல்லை தையிட்டிப்புலம்

கீர்த்திமிகு மூர்த்தி தீர்த்தம் தலம் கொண்ட
கேணியடிப் பிள்ளை யாரின் தலம்
நேர்த்தி நிறைவே மாருதப் புரவல்லி
நிறுவிய பெருமையைக் கொண்ட நிலம்

சீமெந்து தொழிலக சங்கொலியும்
திசை எங்கும் கோயில்கள் மணி ஒலியும்
பாரத்தை ஏற்றி காலையில் சந்தைக்கு
பறக்கும் வான் வண்டில் கோண்ஒலியும்

சோளக காற்றோடு சீமெந்து தூசி
தோகையாய் ஊரை மூடிவிடும்
வானகம் அழுது மழையால் குளிப்பாட்ட
மறுபடி அழகு ஊரில் எழும்

கல்வியில் சிறந்த உத்தியோகஸ்தர் மற்றும்
கண்ணியம் தவறாத ஊராளர்
நன்நெறி பயபக்தி நேர்மை நிறைவான
நல்லோர்கள் ஊர் என்ற பெருமிதமும்

மடத்தடி காணும் கலகலப்பு ஒட்டி
மரண சடங்கு ஐயர் மனையிருப்பு
கடைத்தெரு வாசிக சாலையதும்
கடதாசி விளையாடும் மர நிழலும்

தென்னை கமுகு மாதுளை கொய்யா
தேவைக்கு பசளி முருங்கை இலை
தன்னகம் கொண்ட வீடுகள் ஓலைச்சாரார்
தாவாரத்தில் தொங்கும் பாய்இழைக்க

சூத்திர கிணறுகள் துலாபட்டை இறைப்புகள்
தோணடித் தண்ணீர் அளளிப் பயிர்வளர்க்க
காத்திரமான விளைச்சல் தருகின்ற
காய்கறி வெற்றிலை பணம் உழைக்க

வீட்டுக்கு வீடு நேர்த்திக் கிடாய் கோழி
வேள்விக்கு கியாதி கௌணாவத்தை
தோட்டம் துரவு எங்கும் மா பலா தெருப்பனை
தொங்கும் முடிட்கள் உசார் கொடுக்க

வேலிப் பொட்டுக்குள்ளால் கறி பகிர்வு
விறாந்தையில் பன்பல் நிகழ்மகிழ்வு
போலித்தனம் இல்லா அன்பு உறவு
போனதே கைவிட்டு புலம்பெயர்ந்து

செல்லடி துகள் போல் சிதறிவிட்டோம்
தேசம் பலதிலும் நிலைத்து விட்டோம்
உள்ளத்தை உலுப்பும் ஊர் நினைவு
ஓயாத யந்தி வாழ்வு எமது

நன்றி - கொழுந்து 2013

# விநாயகர் திருவுருவின் தத்துவம்

ஆ.காசிநாதன்
ஆசிரியர்

"திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு – முருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை"

திருவிரட்டை மணிமாலை

சிவபிரான் உமாதேவியாருடன் கைலை மலைச் சாரலில் உள்ள பூஞ்சோலையில் திருவோலக்கமாய் எழுந்தருளியிருந்தார் அதிலுள்ள ஓவியங்களுள் ஒன்று பிரணவ சொரூபமாகிய ஆண் யானையும் பெண் யானையும் வெவ்வேறென்று சொல்லமுடியாதபடி ஒன்றோடொன்று கூடியிருக்கும் பாவனையாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. அதைச் சிவபெருமானும் உமாதேவியாரும் பார்த்தபோது அதிலிருந்து ஐந்து திருக்கரங்களும், மூன்று கண்களும், சந்திரனைத் தரித்த சடையும், யானை முகமும் மும்மதங்களையுமுடைய விநாயகக்கடவுள் திருவவதாரஞ் செய்தருளினர் அவரைச் சிவபிரானும் தேவியும் எடுத்து மடிமீதிருத்தி, சிவகணங்களுக்கெல்லாம் தலைவராக்கி அதனால் கணபதி எனத் திருநாமமிட்டு யார் எந்தக் கருமத்தையும் செய்தாலும் அவரை முதலில் வணங்கித் தொடங்க வேண்டும் எனவும் அப்படித் தொடங்கிய கருமம் இடையூறு இன்றி நிறைவேறுமெனவும், திருவாய் மலர்ந்தருளினர்.

ஆலயங்களில் உள்ள மூர்த்திகள் ஒவ்வொன்றும் இறைவனது அளவில்லாத குணங்களை வெளிப்படுத்தும் சின்னங்களாக உள்ளன. விநாயக உருவம் இறைவனது தன்மைக் குணங்கள் முழுவதையும் வெளிப்படுத்துகின்றது. விநாயகனென்றால் தனக்கு மேலாக ஒரு நாயகனை இல்லாமல் தானே அனைவருக்கும் நாயகன் என்பது பொருள், அனீசுவரன், அநாயக ஏகநாயகம் என்ற பெயர்களெல்லாம் இதே கருத்தை வெளிப்படுத்துவன.

விநாயகரது வதனம் மாத்திரம் யானை வடிவாயிருக்கின்றது. வலது பக்கம் அறக்கருணை மதமும் பொழிகின்றது. அவரது முகம் ஓங்கார எழுத்தின் வடிவமாக உள்ளது. உலகத்தில் மனைவி தனது புருஷனுக்கு நாயகன் என்பாள். வேலைக்காரன் தன் முதலாளியை நாயகன் என்பான். இவர்கள் உடல் சம்பந்தமான நாயகம் செலுத்துபவர்கள் உயிர்களைப்பற்றிய நாயகம் விநாயகர் ஒருவருக்கே உரிவது. சுப்பிரமணணியர் வீரபத்திரர் என்போர் சிவகுமாரராக இருந்தாலும் பிள்ளையார் என்ற பதம் விநாயகர் ஒருவரையே குறிக்கும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களையும் தாமே நீக்குபவரென்பதை உணர்த்த கஜமுக சங்காரத்திற்காக முரித்த கொம்பை வலதுபக்கக் கீழ்த்திருக்கரத்தில் தரித்திருக்கின்றார். கஜமுகாசுரனது மார்பைத் தமது கொம்பினாலே பிளந்த போது, அவன் மலவலி கெட்டுப் பெருச்சாளி ரூபங் கொண்டுவர, திருவடி ஞானத்தைக் கொடுத்துச் சுத்தனாக்கி எக்காலமும் தமக்கு வாகனமாயிருக்கும் பேற்றைக் கொடுத்து ஆட்கொண்டு, ஆன்மாக்களின் ஆணவத்தை நீக்கி அடிமை கொள்பவர் தாம் என்பதை விளக்கினார்.

விந்து நாததத்துவங்களின் சொரூபம் அமைந்த துதிக்கரமானது, ஆன்மாக்களுக்குப் பேபரானந்தப் பெருவாழ்வைக் கொடுப்பதாகிய அத்துவித முத்தியின் இயல்பை உணர்த்துகின்றது. மெய்யன்பர்கள் தமது சீவபோதத்தைக் கவனமாக்கி அர்ப்பணஞ் செய்ய அதனைத் தாம் கொண்டு தமது திருவயிற்றுனுள்ளேயடக்கி, அதற்குப் பதிலாக அவர்களுக்குச் சிவஞானத்தைக் கொடுப்பவர் தாமேயென்பதை உணர்த்தப் பேழையவயிருடையவராகவிருக்கின்றார். ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களினாலும் பஞ்சசகிருத்தியஞ் செய்பவர் தாம் என்பதைச் சிவபிரான் உணர்த்துகின்றார்.

சிவபிரான் ஞானோபதேசம் செய்தது போல விநாயகரும் மேய்கண்டார், நம்பியாண்டார் நம்பி, விஷ்ணுமூர்த்தி, புருசுண்டி முனிவர் முதலானவர்களுக்கு ஞானோபதேசம் செய்தார்.

பிரமதேவர் விநாயகரை வழிபடாமல் படைப்புத் தொழிலைச் செய்ய விகாரமான வடிவங்கள் தோன்றி அவரை மதிக்காமல் ஏசி இகழவும், உதைக்கவும், அடிக்கவும் சென்றன. தன் பிழையை உணர்ந்து விநாயகரைத் தியானிக்கக அவர் ஞானசக்தி, கிரியாசக்தி என்னும் இருவரையும் வழிபடக் கொடுத்தார். அவர்கள் சித்தி, புத்தி என்னும் பெயருடன் வளர்ந்து தவஞ்செய்ய விநாயகர் வந்து அவர்களைத் திருக்கல்யாணம் செய்து கொண்டார்.

மெய்யன்பர்கள் கேட்ட வரஙங்களைத் தவறாது கொடுக்கும் அருள் வள்ளல் ஆதலால் வரதகணபதி, கற்பக விநாயகர், ஆசா பூரகர் என்றும், சுப்பிரமணியருக்குத் திணைப்புனத்திலே வள்ளியைக் கூட்டி வைப்பதற்கு மதயானை வடிவங்கொண்டு உதவபி செய்தமையால் ஆபத்சகாய விநாயகர் என்றும், முதலில் தம்மை வணங்கித் தொடங்குவோருடைய கருமங்களைச் சித்தியடையச் செய்தலினாலே சித்திவிநாயகர் என்றும் துதிக்கப்படுகின்றார். எதை எழுதத்தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழி இடுதல் விநாயக வணக்கமாகும்.

நாம் சிரசிலே விநாயகரை நினைத்துக் குட்டும்போது மத்தகத்திலிருக்கும் அமிர்தம் பெருகிச் சுழுமுனு நாடிமார்க்கமாக மூலாதாரத்தில் ஒளி ரூபமாக இருக்கின்ற விநாயகரையடைந்து அபிஷேகமாக அவர் திருவுள்ளம் மகிழ்ந்து கிருபை செய்வாரென்பதே குட்டிக்கும்பிடுதலின் பாவனையாகும்.

திங்களங் குளவியென்னத் திகழொரு மருப்பிற் சோதி
தங்குகிம் புரிவயங்கத் தடமணி மகுடந் தாங்கித்
துங்கநல் வரங்க ணல்குந் தூயசீ ரிராம சேதுப்
புங்கவர் வணங்கும் யானை முகத்தனைப் போற்றல் செய்வாம்.

நன்றி - தேர் வெள்ளோட்ட மலர் - 1965

# "பிள்ளையாரும் கூட்டுப்பிரார்த்தனையும்"

திருமதி.இராசமணி.தனபாலசிங்கம்
ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியை

சிறுவயதில் இருந்து எமது குலதெய்வமாம் வீரகத்திவிநாயகர் ஆலயத்திற்கு குடும்பத்தினருடன் சென்று வழிபடும் வழக்கம் உண்டு. அக்காலத்தில் J.P சரவணமுத்து ஐயா, ந.கணேஸ்வரன் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி உயிரியல் விரிவுரையாளர், அவரது சகோதரர் ந.கனகசேகரன் வங்கி அதிகாரி சி.சிவமகாராஜா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் போன்றோரால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் இரவு நேரத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்துவார்கள் நானும், என் சகோதரிகள், எமது உறவினர், அயலில் உள்ள மாணவர் குழாம் அனைவரும் நாள், நேரம் தவறாது கூட்டுப்பிரார்த்தனையில் பங்கு கொள்வோம் அத்துடன் அவர்கள் சொற்பொழிவுகளும் நிகழ்த்து வதுண்டு இவற்றில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொள்வேன். எங்கள் கல்விச் செயற்பாடுகளில் கூட்டுப்பிரார்த் தனையினூடாகப் பெற்ற அறிவு மிகவும் துணைநின்றது.

காலத்தின் கோலத்தினால் நாம் சிறகிழந்த பட்சிகள் போல் நாற்திசையும் பிரிந்து வாழ்ந்திருந்தோம். இரு சகாப்தத்தின் பின்னர் பிறந்த ஊரில் குடியமர விநாயகன் வழி வகுத்து எம்மை ஆலய சூழலில் அழைத்து வந்தார். இந்நிலையில் தான், நாம் பெற்ற சமய உணர்வுகள், அறிவு போன்றவற்றை எமது இளஞ்சிறார்களும் பெற்று அவர்களின் வாழ்வு வளமும், செழிப்பும் கொண்டதாக அமைய வேண்டும் என்ற நன் நோக்கத்திலேயே சிவாச்சாரியாரின் அனுமதியுடன் எமது பக்தி அடியார்களுடன் கூட்டுப்பிரார்த்தனை ஆரம்பித்தோம். உண்மையில் தற்போது சிறார்கள், பெரியோர்கள் என பலரும் இணைந்து மிகுந்த பக்தி சிரத்தையுடன் வெள்ளிக்கிழமைகளில் பி.ப.5.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணிவரை நடைபெற்று வருகின்றது.

மேலும் இம் முயற்சி வலுப்பெற எமது ஊரில் உள்ள சமய ஆர்வலர்களின் வழிகாட்டல், அனுசரணை போன்றவை கிடைக்க விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

சுபம்

# மாவைக் கொல்லங்கலட்டி
# வீரகத்திப் பிள்ளையார் பேரில் பாடியவை

சைவத்திரு : பொ.அம்பலவாணக்குருக்கள்

1 28-5-57

வெல்லங்கலந்திடு மெட்பொரி மோதகம் வெண்கரும்பும்
கல்லுங் கிழங்கவல் கற்கண்டு பலாப்பங் காய் கனியும்
வெல்லங் குசந்தந்த வெம்பாசம் மேற்கொள்வியன் கரத்துக்
கொல்லங்கலட்டி இறைவற் களித்தருள் கூடுதியே

2 25-2-58

சீரகத்தியன் கரத்துச் சிவனளித்த காவிரியை
பாரகத்தி லின்றளவும் பாய்ந்திடச் செய் பரம் பொருளை
நாரகத்தினடியார்கள் நாடு கொல்லங்கலட்டியமர்
வீரகத்தி விநாயகநின் விரை மலர்த்தாளினை போற்றி

3 6-9-59

நேரியன் மகளாமந்த நேரிழை நினைந்து போற்ற
வேரியங் கொன்றை வன்னி வில்வமும் பாங்கர் சூழும்
நீரியல் கேணிக் கொல்லங்கலட்டியினிலையங் கொண்டு
காரியசித்தி காட்டுங் கணேசனின் கழல்கள் போற்றி

4 4-9-61

பண்ணேறு மென் மொழியாள் பரமனிடங் கொண்டதுபோல்
விண்ணேறு வெண்முருக்கின் விரிநாக வல்லி வளர்
மண்ணேறு மடியார்கள் மகிழ் கொல்லங்கலட்டியுறை
எண்ணேறு மோதகங் கொள் ஏரம்பகாத்தருளே.

5 18-5-63

தாழை நறுங் கூவினஞ் சார்தாம் பூவிக் கொடிநிரைகள்
வாழை பலா மாவன்னி வளர் கொல்லங்கலட்டியுறை
பேழை நிகர் பெருவயிற்றோய் பெருச்சாளிவாகனத்தில்
ஏழை மனங்களி கூர எழுந்தருளிக்காத்திடுக.

6 19-5-65

பொருள் பொலியுந் திருமகள் சேர்புகழ்க் கொல்லங்கலட்டியுறை புழைக்கை யீசா
இருள் பொழியும் மலர்க் கூந்தல் எழிலாரும் வல்லபை நின் இடப்பால்
ஆக அருள் பொழியுந் திருவிழிகள் அழ கொழுகுந்திருமேனி அடியேன் காணத்
தெருள் மொழியெம் புகலிடமாஞ் செங்கமலத் திருவடியென் சிரத்திற் சேர்ப்பாய்

7 28-4-67

சீர்திகழும் சித்திபுத்தித் தேன் மொழியா ளுடனமரும் தேவே நின்னைக்
கார்த்திகழும் பொழிற் கொல்லங்கலட்டியனெ கணபதியே காப்பாய் என்று
நார்திகழ நல்லறுகு மந்தாரம் நறுவன்னி நயந்து சாத்தித்
தார்திகழும் தீருமுடியாய் தமியேனுன் சரணடைந்தேன் சற்றே பாராய்

8 18-8-67

எக்கருமஞ் செய்தாலும் எத்தகையோராயினுமென் இடையூறின்றி
அக்கருமஞ் தொடங்குங்கால் அதுமுடிப்போன் நீ யென்றே அணைவார் நின் தாள்
சக்கரமால் தன் முருகா தளிர்க்கொன்றை சார் கொல்லங்கலட்டி மேவும்
அக்கராமாம் மேனியனே அருள் வலவை மணவாளா அபயங்காளே.

9 31-1-68

தீராத வினைதீர்க்கமும் சித்தி புத்தி பாகனெனத் தேடிவந்தே
ஆராத காதலுடன் அடிபணிவார்க் கருள் கொல்லங்கலட்டி ஐயா
வாராத செல்வமெலாம் வருவிக்கும் வரதனும் நீ வணங்கி வாழ்த்தும்
சீரான மெய்யன்பர் சிந்தனையை நிறைவேற்றும் தேவா போற்றி

மேற்படி வெண்பாக்களை தொகுத்து அம்மலரில் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் தெற்குவீதி நொத்தாரிஸ் வழவு குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நன்றி - தேர் வெள்ளோட்ட விழா மலர் - 1965



# தெல்லிப்பழை மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி
# கேணிக்கரை
# வீரகத்தி விநாயகர்
# திருவூஞ்சல்

நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

**காப்பு**

சொல்லுமறை யந்தணர் வெள்ள ராதிக்
தொல்குடியும் பல்வளமும் துறைந்தேயோங்குந்
தெல்லிநகர் மாவை கொல்லங்கலட்டி கேணித்
திருக்கரைவா ழொருந்தன்முகச் செல்வாவுன்றன்
செல்லவழி யற்புதபுத் தமுதவின்பச்
செழுந் தமிழா லூஞ்சலிசை தெளிந்துபாடக்
கல்வி தரு மோங்கார வடிவாமுன்றன்
கற்பகஞ்சேர் பொற்பதங்கள் காப்பதாமே.

**நூல்**

1

ஒளி மருவு நாதவிந்து தூணாநாட்டி
உரைமருவு மிரு மொழியும் விட்டம் பூட்டி
தெளிமருவு சிவகலைநூல் வடங்கள் மாட்டி
சிவமருவு மோங்கார பீடங்கூட்டி
மொழிமருவு மந்திர தோரணங்கள் நீட்டி
முதமருவ லியற்றிய பொன்னூஞ்சல் மீதே
வெளிமருவு பொழிற் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடிரூஞ்சல்.

2

விண்பயிலும் ஒண்சுடர்கள் குடைகள் தாங்க
வெளிபயிலும் வளிவேந்தர் கவரி வாங்க
தண்பயிலும் புனலரசன் பனி நீர்தூவ
தார்பயிலுங் கொடி நிரைக ளமரர் காவ
எண்பயிலும் மலரயனாராசிபேச
இனம் பயிலும் விரைமலர்கள் முனிவர் வீச
மின்பயிலும் பொழிற் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகர் யாடீருஞ்சல்.

3

ஏழாளு மிசை முனிமாடகயாழ் மீட்ட
எழிலாளும் தொழின் முழவு நெடுமால் கூட்ட
தாளாளும் தமிழ் முனிவன் தாளம் போட
சதியாளும் பூதகண நாதராட
கோளாளும் பழவடியார் வினைகளோட
களியாளும் மொழிமடவார் வடந்தொட்டாட்ட
வேளாளர் பயில் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீருஞ்சல்

4

திங்களணி செஞ்சடையும் செம்பொற் கொம்பும்
செம்மையணி மணிமார்பும் திருமுன்னூலும்
கொங்கலரும் கொன்றையணி குவவுத்தோளும்
குடவயிறும் விகடநடங் கொண்டதாளும்
ஐங்கரமும் நால்வாயும் மூன்று கண்ணும்
அம்மையிடப் பாகமுமா யாகு வேறி
வெங்கலிதீர்க் குங்கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீருஞ்சல்.

5

மந்திர நீர் பாலிள நீர்மணி நீராட்டி
மான்மதஞ்சந்தனம் பளிதம்மலியக் கூட்டி
சுந்தரப் பூம் பட்டுடுத்திக் கலன்கள் பூட்டித்
தூயமணி மாலை தொடைமாலை சூட்டிக்
கந்தநறும் புகையெடுத்து விளக்கங் காட்டிக்
கழல் பரவு மடியரிடர் கழிய வோட்டி
வெந்துயரம் வீட்டு கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

6

பருப்பு நறும் சருக்கரையும் பாலுந்தேனும்
பாசவலுந்தினையிடியும் பழமும் பாகும்
கருப்பு முறி முறுக்கு வடை கண்டும் சுண்டும்
கடலை பொரி மோதகமு மடையுங் காயும்
திருப் பொலி புத்தமுது மிளந்தெங்கின் காயும்
சீரடியர் தந்து மந்திரத்தாற் போற்ற
விருப் பொடருள் புரி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

7

சுந்தரபபொன் முடியாடச் சுடிகையாட
தூய சடை மதியாட நதியுமாட
வந்து முறச் செவியாட மகிழ்வுமாட
மாணிக்க வடமாட மதாணியாட
முந்து குடவயிறாட முன் நூலாட
முழுதுலகுங் களியாட நடனமாடும்
வெந்துயரம் வீட்டு கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

8

ஓதவிந்து நாத்முற விதித்தா யென்றும்
ஓங்கார மூலமறை விதித்தா யென்றும்
மோதகமுங் கோடுமணிக் கையாவென்றும்
மூவித மங்கல ஞான மெய்யா வென்றும்
வேத பரிபுர கமல பாதா வென்றும்
விக்கினங்கள் தீர்த்தருளுந் நாதாவென்றும்
மேதயர்கள் துதி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

9

கரிமுகனைக் கொன்றமரர் கணத்தைக் காத்தாய்
காகுத்தன் கொலைப்பழியைக் கணத்திற்றீர்த்தாய்
திரிபுரத்தை யெரிக்கவரு தேரைப் பேர்த்தாய்
தினைக்குறவர் மலர்க் கொடியைச் சேய்குச் சேர்த்தாய்
புரி நெகிழா விருவினையும் போகப் பார்த்தாய்
புனல் கவிழ்ந்துப் புரு கூதர்கருணை கூர்த்தாய்
விரி மலர்ப்பூம் பொழிற் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்

10

வரதகர வபயகுட வகட கும்ப
மதவறுகு முக சுமுக வரவேரம்ப
பரத நட கமல பத நி மல போத
பரம சுக வமுத நித மருளுநாதா
புரதகன னரிய சுத விமல வேக
பூரண புண்ணிய புனித புராணயோக
விரததவ மலி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

11

மதிய மலி செஞ்சடையீராடீரூஞ்சல்
வஞ்சமலி செஞ்சடையீராடீரூஞ்சல்
துதி மலி போதக முவந்தி ராடீரூஞ்சல்
சுவைமலி மோதகமுவந்தீராடீரூஞ்சல்
கதிமலியும் சலமுடித்தீ ராடீரூஞ்சல்
கறைமலி சஞ்சல முடித்தீராடீரூஞ்சல்
விதியடியர் துதி கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல்.

**வாழி**

ஆவாழி யருள் வாழி யறங்கள் வாழி
அருந்தமிழும் பழமனைறயா கமும் வாழி
பூவாழி பொன்னின் மழை பொழிந்து வாழி
பூதி கண்டிகை யைந் தெழுத்தும் பொலிந்துவாழி
தேவாழி மாவை நகர்ச் செய்வேள் வாழி
செந்தமிழி னூஞ்சலிசை சிறந்து வாழி
மேவார்க்கும்மருள் கொல்லங்கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரும் வாழி வாழி

# வீரகத்தி விநாயகனைப் பாடி மகிழ்வீர்

1) வாழ்விடம் காணவருள் செய்தாய் போற்றி
வல்வினையின் நாயகனே போற்றி போற்றி
தாழ்வில்லா நிலைதருவாய் நாதாபோற்றி
நம்பியவர் துயரறுத் தருள்வாய் போற்றி
ஆழ்மனத்துள் உறைபவனே அபயம் நல்கி
**அன்புடனே எழமக்காத்து வலிமைநல்கும்**
தாழ்சடையோன் தருகனியே உமையின் செல்வா
தாள்பணிந்தே னுந்தருட் கொடையே காப்பு

2) **வாழ்விடம் காணவருள்**
**செய்தாய் போற்றி**
மாருதப் புரவீக வல்லிதன் குன்மபிணி
மாவையினில் மறைந்துகெடவே
மாறாது தன்முகப் பிணியதன் வடுக்கால்
மனம் நொந்த மங்கை நல்லாள்
ஒருகை முகனேயென் அப்பனே உந்தனது
சோதனை யோவென்றுமே
ஒருமன தாகவே துதிமுகன் பாதத்தை
உறுதியுடன் நினைந்தபேறால்
வருவினை நீங்கியே வாழ்வொளி பெற்றிட
வருவுக்கிர சிங்கன்தனையும்
வதுவைகொண் டின்புற்ற வரலாறு பொய்யாது
வைத்தமுதற் கணபதியே
இருகரம் கூப்பியே இறைஞ் சியே தொழுமடியார்
இடர்களைந் தருளுமரசே
**இசை கொண்ட கொல்லங் கலட்டிவாம் வீரகத்தி**
விநாயகனே அருட்தெய்வமே

3) உனைநாளும் நினைந்தடியார் தொழுதிடவே வருநே
வினைநீக்கி வழிகாட்டுவாய்
உற்றதோர் பேரொளியைக் கண்டுதிரு வூருயர
உன்னருள் ஒளிநல்குவாய்
சுனையோடு அரசமர நிழல்தேடி அமர்ந்தருள்வாய்
சுடரான கேணிக்கரையில்
சுந்தர மதிமுகந்தாள் வைத்திட அருள்முகமே
காட்டியெம்மை யாளவந்த
வினைதீர்க்கும் வித்தகனே வித்தக மெய்ப்அபொருளே
வீடுபெற் றௌவை மகிழ
விந்தையுறத் துதிக்கரத்தால் ஏந்தியே கைலையில்
வைத்துநடம் புரிந்தவிறையே
நினைந்து நினைந்துனை மனமுருகி யேதொழும்
அன்பர்க் கருள் செய்தவா
நீலமணி கண்டனுமை தந்தவருங் கனியேயென்
**கற்பகமே அருள்ளட்டுவாய்**

4) உமையவள் தருகனி எனவளர் தெய்வமே
உன்னடி மலர் பணிந்தேன்
உத்தம னேமாவைக் கொல்லங் கலட்டியில்
உறைந்தொளி தருமையனே
இமையவர் இடர்கெட கயமுகா சுரனை
வதைத்தருள் செய்த இறைவா
இந்நில மாந்தருந் துதித்திட இங்கெழுந்
தருள் மழை சொரியும் அழகா
சுமையென இந்திரன் தன்னையும் வாட்டிய
துயர்களும் மறைந்து ஓட
தூயதோர் அகத்திய முனிகமண்டலந்தனை
சரித்தருள் தந்த பொருளே
இமைப்பொழு தும்முனை மறவாதிருந்துனை
**இறைஞ்சியே மகிழ நாமும்**
ஈசனு மையவள் பாலன் எம் நேசனே
இடர்கெடுத் தருளுமையா

# கொல்லங்கலட்டி
# வீரகத்தி விநாயகர்
# திருத்தல வெண்பா

செ.கதிரேசப்பிள்ளை

### காப்பு

காட்சிமிகு கொல்லங்கலட்டி விநாயகரின்
மாட்சி கவி சொல்ல வந்தவெனை – ஆட்சிபுரிந்
தன்றடிமை கொண்டுறையும் அப்பரனே காத்திடுவான்
நின்றிறைஞ்சு கின்றேன் நினைந்து.

(1)

### தலப்பெயர்

அசைநிலையொன் றோடருகோர் சாரியைவந் தெய்தி
இசையுங்கல் சேர்நிலம்பின் ஏறின் - திசையெல்லாம்
வெல்வீர கத்தி விநாயகனார் மேவிடமாம்
கொல்லங் கலட்டியெனக் கூறு.

அசைநிலை – கொல், சாரியை – அம், கல்சேர்நிலம் - கலட்டி முன்றும் முறையே சேரிற் கொல்லங் கலட்டியாதல் காண்க.

(2)

பைங்கொடியின் சார்பாற் பணவரவு கொள்ளுதலாற்
சங்கரனேர் கொல்லங் கலட்டியே – துங்கமிகு
வீரகத்தி நாம விநாயகனார் தாம்விரும்பிச்
சேரகத்தி னாமமெனத் தேர்.

முதலாம் அடி சிவனுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை. சிவன், பைங்கொடி – பசிய கொடிபோல்வாராகிய பார்வதியம்மை. பணவரவு= பணம் + அரவு, படத்தையுடைய பாம்பு.
கொல்லங்கலட்டி, பைங்கொடி – வெற்றிலை, பணவரவு – பணமாகிய வருமானம்.

(3)

மாவையுற் றோர்பாற் கடல்மருவ லால்மாலாந்
தேவைநிகர் கொல்லங்கலட்டியே – பூவிற்
கயமா முகத்தவுணற் காய்ந்தருளும் முக்கட்
கயமா முகனுறைவு காண்.

முதலாம் அடி விஷ்ணுவுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை, விஷ்ணு, மாவையுற்று – மா - இலக்குமி, இலக்குமியைப் பொருந்தி, ஒரு பாற்கடல் மருவலால் - ஒப்பற்ற பாற்கடலை சேர்ந்தது.

கொல்லங்கலட்டி, மாவையுற்று – மாவிட்டபுரத்தின் ஒரு பகுதியாகப் பொருந்தி, ஒரு பால் கடல் மருவலால் - ஒரு பக்கத்தே (வடதிசையில்) கடல் அமைந்து விளங்குவதால், மாலாந்தேவு, திருமாலாகிய தெய்வம் கயமாமுகத்தவுணன், கயமுகாசுரன், கயமாமுகன், ஆனைமுகமுடைய விநாயகர்.

(4)

பூவிருக்கை யாற்புலவர் போற்றுதலால் நான்முகனாந்
தேவனைய கொல்லங் கலட்டியே - தீவினைகள்
அஞ்சக் கரத்தால் அருளும் விநாயகனாம்
பஞ்சக் கரத்தான் பதி

முதலாம் அடி பிரமாவுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை, பிரமா பூவிருக்கை தாமரைப் பூவாகிய ஆசனம் புலவர் போற்றுதல் - தேவர்கள் மதித்தல்.

கொல்லங்கலட்டி: பூவிருக்கை – மலர்கள் நிறைந்திருத்தல் புலவர் - பாவலர். அஞ்சக் கரத்தால் - அஞ்சும்படி தும்பிக்கையால்
பஞ்சக் கரத்தான் - ஐந்து கரமுடையவன்.

(5)

பொன்கலையை நல்விழியாப் போற்றுதலிற் பார்வதியாம்
மென்கொடிநேர் கொல்லங்கலட்டியே – என்சுவலை
நீக்குமரன் அன்னையுமை நேசமுடன் நல்கவரு
கோக்குமரன் வாழுங் குடி.

முதலாம் அடி பார்வதிக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.
பார்வதி, பொன் - இலக்குமி, கலை – கலைமகள், இலக்கமியையும் கலைமகளையும் இரு கண்களாக பெற்றிருப்பவர்.
கொல்லங்கலட்டி, பொன் - பொருள் கலை – கல்வி பொருளையும், கல்வியையும் இரு கண்ணாக மதித்து வாழுதல்.
நீக்குமரன் : நீக்குகின்ற அரன் = சிவன்
கோக்குமரன் : தலைமகன் (கோ = தலைமை)

(6)

வள்ளிபடர் கிஞ்சுகத்தின் சேயொளியால் மாமுருக
வள்ளல்நேர் கொல்லங் கலட்டியே - கள்ளவிழும்
போதகத்தின் வண்டாய்ப் புகும்அடியார் கண்களிக்கும்
போதகத்தின் இன்பப் புகல்

முதலாம் அடி முருகனுக்கும் கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.
முருகன் : வள்ளி படர் - வள்ளியம்மை வலப்பாகத்துப் பொருந்தி யிருத்தல்: இஞ்சுகம் = முள்முருக்கு, இங்கே ஆகுபெயராய் மலரையுணர்த்திற்று. கிஞ்சுகமலரின் தொகுதியாற் கிளரும் கூட்டமாகிய சிவந்த ஒளி செவ்வொளி மேனி முருகனை உனர்த்தும் என்க.

கொல்லங்கலட்டி : வள்ளி - கிழங்கு பெறுவதற்காகப் பயிரிடப்படும் வள்ளிக் கொடி. வள்ளிக் கொடி கிங்சுக மரத்திற் படரவிடப்படுவது குறித்தது.
போதகம் :- போது – பூ அகம் உற்புறம் (போது + அகம்)
போதகம் யானைக்கன்று, புகல் - இருப்பிடம்

(7)

நாற்றந்த வேழமாடி நல்லரம்பை சேர்தலிற்பொன்
மேற்றலமாங் கொல்லங் கலட்டியே - கூற்றுதைத்த
சங்கரனார் நல்குந் தலைமகனாம் வீரகத்தி
ஐங்கரனார் வாழ்வென் றறி.

முதலடி பொன்னுலகுக்கும், கொல்லங்கலட்டிக்கும் சிலேடை.
பொன்னுலகு : நாற்றந்த வேழம் = நால் + தந்த+ வேழம் = நான்கு தந்தங்களையுடைய ஐராவதமென்னும் வெள்ளையானை ஆ: காமதேனுவாகிய பசு, அரம்பை : தேவப்பெண்கள்
கொல்லங்கலட்டி : நாற்று+ அந்த+ வேழம் = முளைக்கச் செய்கின்ற அந்த நல்ல கரும்பு, மா - மாமரம், அரம்பை - வாழை
பொன்மேற்றலம் - சுவர்க்கமாகிய மேலுலகம், வாழ்வு - வைகுமிடம்.

நன்றி - மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர்
கும்பாபிஷேகச் சிறப்பு மலர் 1965



# மாவை கொல்லங்கலட்டி
# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் துதி
# ஞானவொளி காட்டியருள் கூட்டுமழகா

கவியாக்கம்
சு.குகதேவன்
தெல்லிப்பளை

வைகாசித் திங்கள்வளர் பிறையோடும் கூடும்
வளமான நாளில்கண நாதன் கொடி ஏறும்
ஏகாந்த மானகொல்லங் கலட்டியினில் மேவும்
எழிலான வீரகத்தி விநாயகனைப் பாடும்

ஓங்கார மந்திரநல் வடிவான செல்வன்
ஒளி ரூபம் கபடடியுமை தந்ததிரு மைந்தன்
மங்கைமா ருதப்புர வல்லிமுகம் மலர
வைத்தகண நாதருள்ளும் முதலான தேவா

சித்திரக் கொடியேறும் ஏறும் தினம் காண
சிந்தைகு ளிரும்மெந்தன் அருள்ஞானச் செல்வா
அத்திமு கத்தழகா அருள்ஞான ஒளியே
அடியார்க் கருளும்கரி முகனேநீ வாவா

வெற்றிமு கத்தழகா சக்தியுமை பாலா
வேதனைகள் நீக்கியொளி கூட்டிநலம் காட்டும்
ஏற்றவழி காட்டியருள் உமைதந்த தீரா
எமைவாட்டும் தடை நிக்கி அருளுமுமை செல்வா

பக்தியுடன் உன்பாதம் மலர்கண்டு வணங்கி
பாவவினை தீர்க்குமுந்தன் அருள்நானம் வேண்டி
சித்திபுத்தி நல்கும் சக்தி கணநாதா உந்தன்
சீரடிகள் பணிந்தோமருள் தருவாயென் செல்வா

ஆறுமுகன் சோதரனே அருளானை முகனே
ஆறுதலை வேண்டியுனைத் தாள் பணிந்தோ மிறையோ
கூறுபட வேலெறிந்த குகனோடும் வள்ளி
கூடி மனம் மகிழவழி செய்தவனே அருள்வாய்

கரங்கூப்பித் தொழுதுநின்றோம் கலிநீக்கி யருள்வாய்
கடிதிலுந்தன் கழல்நாடிப் பணிந்திடுவே வருவாய்
சுரர் யாரும் தொழதுநின்ற சுந்தரனே எங்கள்
துயரோடு வழிகாட்டி அருளுமுமை மைந்தா

நம்பி ஔவை அகத்தியரும் நாடித்தினம் தொழவே
நல்வழி காட்டியுந்தன் அருகினிலே வைத்தாய்
செம்மையுறும் உந்தனருள் ஒளி காட்டி எமையும்
செழிப்போடு உன்னருகில் வாழ்ந்திடவே செய்வாய்

ஒற்றைம ருப்போனே உனை நாடி நாடி
உள்ளங்கு ளிரவழி காட்டியெம்மை யாளும்
வெற்றித ரும்மழகா வேதாந்த பொருளே
வேழ முகங்கொண்டருளும் வேதனைகள் தீரும்

கேணிக்க ரைமேவும் திருவயென் தேவா
கேடகல நாளுமுந்தன் அருளொளியே காண
பேணியுயர் அமைதிதரும் உன்னழகு காட்டி
மேதினியில் நாமிருக்க வாழிகாட்டும் செல்வா

## ஔவையார் அருளிச் செய்த
## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞானும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துக் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியிற்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையில் இனிதெனக் கருளி

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கு தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தில் முட்டிய தூணில்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண் டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூஷ்மமும்
எண்முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற் கொன்றிடமென்ன

அருள்தரு ஆனந்தத் அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா அனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்தவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

**விநாயகர் அகவல் முற்றியது**



# விநாயகர் நூற்றெட்டு நாமாவளி வழிபாடு

**விநாயகனை, வேலனுக்கு மூத்தவனை, தும்பிக்கையானை தினந்தோறும் துதிப்போர் கீழ்க்கண்ட நூற்றியெட்டு போற்றிகளைப் படித்து வணங்க வேண்டும்.**

1. ஓம் அத்தி முகனே போற்றி
2. ஓம் அம்பிகைச் செல்வா போற்றி
3. ஓம் அம்மையே அப்பா போற்றி
4. ஓம் அருமறைக் கொழுந்தே போற்றி
5. ஓம் அமரர்கள் கோனே போற்றி
6. ஓம் அடியார்க்கு இனியோய் போற்றி
7. ஓம் அங்குச பாஸா போற்றி
8. ஓம் அரு உருவானாய் போற்றி
9. ஓம் அறுமுகன் அண்ணா போற்றி
10. ஓம் அணுவினுக்கு அணுவே போற்றி
11. ஓம் அண்டங்கள் ஆனாய் போற்றி
12. ஓம் அவல், பொரி, அப்பம், அருந்துவோய் போற்றி
13. ஓம் பிட்டும். முப்பழமும் நுகர்வோய் போற்றி
14. ஓம் ஆதி மூலமே போற்றி
15. ஓம் ஆருயிர்க்குயிரே போற்றி
16. ஓம் ஆரா அமுதா போற்றி
17. ஓம் இருள் தனைக் கடிவோய் போற்றி
18. ஓம் இடையூறு களைவோய் போற்றி
19. ஓம் இன்பத்தின் பெருக்கே போற்றி
20. ஓம் இருவினை அறுப்பாய் போற்றி
21. ஓம் ஈசனார் மகனே போற்றி
22. ஓம் ஈரேழாம் உலகா போற்றி
23. ஓம் உத்தமக் குணாளா போற்றி
24. ஓம் உலகெலாம் காப்பாய் போற்றி

25. ஓம் உண்மை நெறியாளா போற்றி
26. ஓம் உம்பர்கள் தொழுவோய் போற்றி
27. ஓம் ஊழ்வினை ஒழிப்பாய் போற்றி
28. ஓம் எங்குமே நிறைந்தாய் போற்றி
29. ஓம் என்றுமே திகழ்வாய் போற்றி
30. ஓம் எங்குமே அமர்ந்தாய் போற்றி
31. ஓம் எவர்க்குமே அருள்வாய் போற்றி
32. ஓம் எதையுமே முடிப்பாய் போற்றி
33. ஓம் எண்குண சீலா போற்றி
34. ஓம் எழு பிறப்பறுப்பாய் போற்றி
35. ஓம் ஏழைப் பங்காளா போற்றி
36. ஓம் ஏக நாயகனே போற்றி
37. ஓம் எழில் மிகு தேவே போற்றி
38. ஓம் ஒளவையார்க் கருள்வாய் போற்றி
39. ஓம் ஐங்கர முடையாய் போற்றி
40. ஓம் ஐம்புலன் அடக்குவாய் போற்றி
41. ஓம் நான்கு நற்புயத்தாய் போற்றி
42. ஓம் நாவலர் பணிவாய் போற்றி
43. ஓம் முக்கண்கள் உடையாய் போற்றி
44. ஓம் முழு முதற் பொருளே போற்றி
45. ஓம் ஒளி மிகு தேவே போற்றி
46. ஓம் ஓங்கார மூர்த்தி போற்றி
47. ஓம் கணத்து நாயகனே போற்றி
48. ஓம் கருணையார் மூர்த்தியே போற்றி
49. ஓம் கலைஞானக் குருவே போற்றி
50. ஓம் கயமுகனைக் காய்ந்தாய் போற்றி
51. ஓம் கற்பகக் களிறே போற்றி
52. ஓம் கண்கண்ட தேவே போற்றி
53. ஓம் கந்தனை வென்றாய் போற்றி
54. ஓம் கனிதனைப் பெற்றாய் போற்றி
55. ஓம் சங்கத்துத் தமிழே போற்றி

| | | |
|---|---|---|
| 56. | ஓம் சரவணன் தொழுவாய் | போற்றி |
| 57. | ஓம் சர்வ லோகேசா | போற்றி |
| 58. | ஓம் சாந்தமார் மூர்த்தி | போற்றி |
| 59. | ஓம் சுருதியின் முடிவே | போற்றி |
| 60. | ஓம் சொற்பதம் கடந்தாய் | போற்றி |
| 61. | ஓம் நம்பிக்கு அருள்வாய் | போற்றி |
| 62. | ஓம் நாதனே, கீதா | போற்றி |
| 63. | ஓம் தவசிகள் தொழுவோய் | போற்றி |
| 64. | ஓம் தாயினும் நல்லாய் | போற்றி |
| 65. | ஓம் தரும குணாளா | போற்றி |
| 66. | ஓம் தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் | போற்றி |
| 67. | ஓம் தூயவர் துணைவா | போற்றி |
| 68. | ஓம் துறவிகள் பொருளே | போற்றி |
| 69. | ஓம் நித்தனே, நிமலா | போற்றி |
| 70. | ஓம் நீதி சால் துரையே | போற்றி |
| 71. | ஓம் நீல மேனியனே | போற்றி |
| 72. | ஓம் நிர்மலி வேணியா | போற்றி |
| 73. | ஓம் பேழை நல் வயிற்றாய் | போற்றி |
| 74. | ஓம் பெருச்சாளி வாகனா | போற்றி |
| 75. | ஓம் பாரதம் வரைந்தாய் | போற்றி |
| 76. | ஓம் பாவலர் பணிவாய் | போற்றி |
| 77. | ஓம் பாசத்தை அறுப்பாய் | போற்றி |
| 78. | ஓம் பவப்பிணி ஒழிப்பாய் | போற்றி |
| 79. | ஓம் மும்மலம் அறுப்பாய் | போற்றி |
| 80. | ஓம் முத்தியைத் தருவாய் | போற்றி |
| 81. | ஓம் வேழ முகத்தாய் | போற்றி |
| 82. | ஓம் வேட்கையைத் தணிவிப்பாய் | போற்றி |
| 83. | ஓம் வேள்வியின் முதல்வா | போற்றி |
| 84. | ஓம் வேதாந்த விமலா | போற்றி |
| 85. | ஓம் ஒழுக்கமது அருள்வாய் | போற்றி |
| 86. | ஓம் உடல் நலம் தருவாய் | போற்றி |

87. ஓம் செல்வம் தருவாய் போற்றி
88. ஓம் செருக்கினை அழிப்பாய் போற்றி
89. ஓம் சிந்தனையை அடக்குவாய் போற்றி
90. ஓம் சினம், காமம் தவிர்ப்பாய் போற்றி
91. ஓம் கல்வியை அருள்வாய் போற்றி
92. ஓம் கரத்தலை ஒழிப்பாய் போற்றி
93. ஓம் ஔவியம் அகற்றுவாய் போற்றி
94. ஓம் அறநெறி புகட்டுவாய் போற்றி
95. ஓம் அவாவினை அடக்குவாய் போற்றி
96. ஓம் அன்பினை வளர்ப்பாய் போற்றி
97. ஓம் ஊக்கமது அருள்வாய் போற்றி
98. ஓம் அமிர்த கணேசா போற்றி
99. ஓம் ஆக்கம் பெருக்குவாய் போற்றி
100. ஓம் வலம்புரி விநாயகா போற்றி
101. ஓம் வரமெலாம் தருவாய் போற்றி
102. ஓம் சித்தி விநாயகா போற்றி
103. ஓம் சிவபதம் அருள்வாய் போற்றி
104. ஓம் சுந்தர விநாயகா போற்றி
105. ஓம் சுக போகம் தருவாய் போற்றி
106. ஓம் அனைத்தும் ஆனாய் போற்றி
107. ஓம் ஆபத் சகாயா போற்றி
108. ஓம் அமிர்த கணேசா போற்றி

# ஸ்ரீ பிள்ளையார் சிந்தனை

| | | |
|---|---|---|
| 1. | சிந்தித்தவர்க்கு அருள் கணபதி | ஜய ஜய |
| 2. | சீரிய ஆனைக் கன்றே | ஜய ஜய |
| 3. | அன்புடை அமரரைக் காப்பாய் | ஜய ஜய |
| 4. | ஆவித் துணையே கணபதி | ஜய ஜய |
| 5. | இண்டைச் சடைமுடி இறைவா | ஜய ஜய |
| 6. | ஈசன் தந்தருள் மகனே | ஜய ஜய |
| 7. | உன்னிய கருமம் முடிப்பாய் | ஜய ஜய |
| 8. | ஊர்நவ சக்தி உகந்தாய் | ஜய ஜய |
| 9. | எம் பெருமானே இறைவா | ஜய ஜய |
| 10. | ஏழுலகந் தொழ நின்றாய் | ஜய ஜய |
| 11. | ஐயா கணபதி நம்பியே | ஜய ஜய |
| 12. | ஒற்றை மருப்புடைய வித்தகா | ஜய ஜய |
| 13. | ஓங்கிய ஆனைக் கன்றே | ஜய ஜய |
| 14. | ஔவியமில்லா அருளே | ஜய ஜய |
| 15. | அஃர வஸ்து ஆனவா | ஜய ஜய |
| 16. | கணபதி என் வினை களைவாய் | ஜய ஜய |
| 17. | ‘ங’ ப்போர் மழுவோன் ஏந்தியே | ஜய ஜய |
| 18. | சங்கரன் மகனே சதுரா | ஜய ஜய |
| 19. | ஞய நம்பினார் பாலாடிய | ஜய ஜய |
| 20. | இடம் படு விக்ந விநாயகா | ஜய ஜய |
| 21. | இணங்கிய பிள்ளைகள் தலைவா | ஜய ஜய |
| 22. | தத்துவ மறைதிரு வித்தகா | ஜய ஜய |
| 23. | நன்னெறி விக்கின விநாயகா | ஜய ஜய |
| 24. | பள்ளியிலுறை தரும் பிள்ளாய் | ஜய ஜய |
| 25. | மன்றுளாடும் மணியே | ஜய ஜய |
| 26. | இயங்கிய ஞானக் குன்றே | ஜய ஜய |
| 27. | அரவக் கிண்கிணி ஆப்பாய் | ஜய ஜய |
| 28. | இலவசக் கொம்பென் றேந்தியே | ஜய ஜய |
| 29. | வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் | ஜய ஜய |
| 30. | அழகிய ஆனைக் கன்றே | ஜய ஜய |
| 31. | இளமத யானை முகத்தாய் | ஜய ஜய |
| 32. | இரகுபதி விக்ந விநாயகா | ஜய ஜய |
| 33. | அனந்தலோ டாதியிலடி தொழ வருவனே | ஜய ஜய |

# ஷோடஸ நாமாவளி எனப்படும் பதினாறு நாமாவளி

ஓம் யானை முகனே போற்றி
ஓம் குள்ள வடிவுடையோனே போற்றி
ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி
ஓம் கருமை கலந்த பொன்வண்ணனே போற்றி
ஓம் முறம் போன்ற செவி படைத்தவனே போற்றி
ஓம் பெருவயிறு உடையவனே போற்றி
ஓம் சந்தோஷத்தைத் தருபவனே போற்றி
ஓம் இடையூறுகளை நீக்குவதில் தலைவனே போற்றி
ஓம் வினைகளை நாசம் செய்பவனே போற்றி
ஓம் பயங்கர மானவனே போற்றி
ஓம் கணங்களுக்குத் தலைவனே போற்றி
ஓம் இளஞ் சூரியனே போற்றி
ஓம் முருகனின் சோதரனே போற்றி
ஓம் கொழுக்கட்டைப் பிரியனே போற்றி
ஓம் எலி வாகனனே போற்றி
ஓம் மோதகப் பிரியனே போற்றி

இந்தப் பதினாறு நாமாவளியும் அதிக சக்தி வாய்ந்தவை.

இவற்றை எப்போதெல்லாம் சந்தர்ப்பம் வாய்க்கிறதோ அப்போதெல்லாம் சொல்லி வர வேண்டும்.

# காசிப முனிவர் அருளிய விநாயகர் கவசம்

(இது முத்கல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்தது. இதைத் தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு தந்துள்ளார்)

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தா மயர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின்வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசு தர்காக்க
நனிவாக்கை விநாயகர்தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்திதார்த்தர் காக்க.

காமருபூ முகந்தன்னைக் குணேசர்
நனிகாக்க களங்கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க

ஏமமுறு மணிமுலை விக்கின
விநாசன் காக்கஇதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க
வகட்டினைத் துலங்கேரம்பர் காக்க.

பக்க மிரண்டையும் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாபம் நீக்கும்
விக்கின கரன்காக்க விளங்கி லிங்கம்
வியாழபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்கணபன் காக்க ஊருவை
மங்கள மூர்த்தியுவந்து காக்க.

தாள்முழந்தாள் மகாபுத்தி காக்க
விருபதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிர சாதனர் காக்க
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபுரகர் காக்க
விரல்பத்து மத்தகர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர் தென்திசை காக்க
மிக்கநிருதியிற் கணேசுரர் காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க வாயுவிற்

கசகன்னன் காக்க திகழுதீசி
தக்கநிதிபன் காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க
விரவினுஞ் சந்தியிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க
விராக்கதர் பூதமுறுவே தாளம்
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்கு பாசாங்
குசர்தாம் விரைந்து காக்க.

மதிஞானம் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனந்தானியங் கிருகம்
மனைவி மைந்தர்பயினட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வாயுதர் காக்க
காமர்பவுத் திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெல்லா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

வென்றிசீவி தங்கபிலர் காக்க
கரியாதி யெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமு
மோதிடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மற்றாங் கவர் தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

ராம் பதிப்பகம் கே.கே.எஸ் வீதி, மல்லாகம். 021 321 5253